Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்


www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 40 • 24.04.2016






# பிக்குமார் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்களா?




இந்தியக் கண்ணால் காணும் ஈழத்தமிழர் போராட்டம்

6



வாளை காணோம்- பதறுகிறார் யாழ்ப்பாண ராஜா

9



good bye "5.3"

20

# சாது மிரண்டாலும் காடு கொள்ளும்

வடக்கு மாகாணசபையின் அமைச்சொன்றின் முக்கிய அதிகாரியொருவர் அண்மையில் ஒரு வசனம் சொன்னார். ‘முன்னைய ஆட்சியில் சொல்ல முன்னர் விடயம் நடந்தது. இப்பொழுது சொல்லியும் விடயங்கள் நடப்பதில்லை’ என நொந்து கொண்டார்.

நமது அதிகாரிகளின் நடத்தை, செயற்றிறன் பற்றிய ஒப்புதல் வாக்குமூலத்தை ஒருதுறைசார்ந்த அதிகாரியும் தந்துள்ளாரே தவிர, இந்த தகவல் புதியதல்ல. நமது அரச அதிகாரிகளின் இயல்பை ஒவ்வொருவரும் தினந்தோறும் நேரில் பார்த்துக் கொண்டுதானிருக்கிறோம். தாமதம், வேண்டாவெறுப்பு, பக்கச்சார்பு, எஜமான மனநிலை எல்லாம் நமது அரச அதிகாரிகள் பெரும்பாலானவர்களின் பொதுமனநிலை.

முன்னர் வடக்கு ஆளுனராக இருந்த சந்திரசிறியின் காலத்தில் அதிகாரிகள் பணியாற்றுவதற்கும், தற்போது பணியாற்றுவதற்குமிடையில் நிறைந்த வித்தியாசங்கள் உள்ளன. ஒரு இராணுவ கட்டமைப்பை போல அப்பொழுது அவர் நிர்வாகத்தை பேணினார். அவரருகில் செல்லவே அதிகாரிகள் நடுங்கினார்கள். அதனால் சொல்ல முன்னரே காரியங்கள் நடந்தன. தற்போது நிலைமை தலைகீழ். அப்பொழுது நின்றதற்கெல்லாம் சேர்த்து அதிகாரிகள் இப்பொழுது உட்கார்ந்திருக்கிறார்கள்.

கறார்தன்மையான நிர்வாக முறைமை இல்லாமல் நெகிழ்ச்சியான, ஜனநாயக தன்மைமிக்க நிர்வாகம் என்பது நம்மவர்களின் அர்த்தத்தில் ‘ஏலாவாளி’கள் என்பதோ என்னவோ. எப்பொழுதும் யாராவது ஒருவர் அல்லது அதிகாரம் தடியுடன் பின்னால் நின்று மிரட்டிக் கொண்டிருப்பதையே அவர்கள் விரும்புகிறார்கள். இது தனியே தமிழர்களின் நிலையோ அல்லது அரசஅதிகாரிகளின் நிலையோ அல்லாமல் ஒட்டு மொத்த இலங்கையின் நிலையுமென்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

முன்னைய மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் மக்கள் பிரதிநிதிகள் எனப்பட்டவர்களே ஒருவித பவ்வியமான அரசியல்தான் செய்தனர். மகிந்த ராஜபக்சவை அவரது அரசியல் போக்கை எதிர்த்து அல்லது கேள்வி கேட்பதெல்லாம் நினைத்தே பார்க்க முடியாத விடயங்கள். அதிகாரிகள் தொடக்கம் அரசியல்வாதிகள் வரை எல்லோருக்கும் இதுதான் நிலை. அந்த சமயத்தில் அரசியல்வாதிகள் அதிக விசித்திர வித்தைகள் காட்டாமல் ‘ஒழுங்கு மரியாதையாக’ இருந்து அரசியல் செய்ததை போன்ற தோற்றம் நிலவியது.

மகிந்த ராஜபக்சவின் வீழ்ச்சிக்கும் அந்தப்பாணி அரசியல் நடைமுறைதான் காரணமாக அமைந்துவிட்டது. மகிந்தவின் வீழ்ச்சியின் பின்னர் ஜனநாயக நெறிமுறைகளிற்கு அதிகம் வாய்ப்பளித்து உருவாகியுள்ள புதிய ஆட்சியில் அரசியல்வாதிகள் நடந்து கொள்வதை பார்க்கும்போது மகிந்த ராஜபக்ச போன்ற தலைவர்தான் இலங்கைக்கு பொருத்தமோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. ஜனாதிபதி மைத்திரிபால பதவியேற்றதும் சுதந்திரக்கட்சி மற்றும் முன்னாள் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு உறுப்பினர்கள் மிக மௌனமாக இருந்தார்கள். விமல், வாசுதேவ, கம்மன்பில, தினேஷ் என்ற சிறிய அணி ஒன்றுதான் அரசிற்கெதிரான கலகக்காரர் களாக இருந்தனர். அவர்களது குரல்கள் அதிகம் கவனிக்கவும் படாமலிருந்தன.

சுதந்திரக்கட்சிக்குள் மைத்திரிபால அதிக விட்டுக்கொடுப்பு மற்றும் ஜனநாயகதன்மையுடன் நடந்து கொள்ள ஆரம்பித்த பின்னர்தான் குழப்பங்கள் தலைதூக்க ஆரம்பித்தன. ஒவ்வொரு எதிர்க்குரலிற்கும் மகிந்த ராஜபக்ச பாணியில் மைத்திரியும் நடந்து கொள்வார் என ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் அவர் அப்படி நடக்கவில்லையென்பது உறுதியான பின்னர் இப்பொழுது சுதந்திரக்கட்சி இரண்டாக பிளவுறும் நிலைக்கு வந்துநிற்கிறது.

ஜனநாயக சூழலில் கட்சியிலிருந்து உறுப்பினர்கள் பிரிந்து செல்வது, புதிய கட்சி தொடங்குவதெல்லாம் சாதாரண விடயம். ஆனால் சுதந்திரக்கட்சியில் நடப்பது ஜனநாயகபூர்வ செயற்பாடல்ல.

கூட்டு எதிரணியென கூறப்படுவதில் உள்ளவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்களின் கைகள் கறை படிந்தவை. வெளிப்படையான ஊழல் குற்றச்சாட்டுக்கள் உள்ளவை. எஞ்சியவர்கள் அதிகாரத்திற்காக அலைபவர்கள். இந்த குழுவிடம் நாட்டின் அதிகாரம் சென்றால் அது நாட்டிற்கே ஆபத்தானது. மைத்திரியின் ஜனநாயகபூர்வ செயற்பாடு கூட்டு எதிரணியின் தாராள செயற்பாட்டிற்கு இடம்வழங்கியுள்ளது. சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்கள். மைத்திரியின் செயற்பாடுகள் சாது மிரண்டாலும் காடு கொள்ளும் என எதிரணி எண்ண வைத்திருக்கலாம். அதாவது, வடக்கு அரச அதிகாரிகளை போல.

அண்மைய வருடங்களில் இல்லாத அரசியல் குழப்பநிலை இப்பொழுது தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ளது. சினிமா பாணியில் சொல்வதென்றால் மகிந்த ராஜபக்ச ஊக்குவித்த அடாவடி அரசியலின் பிரதிநிதிகள் ஒரு அணியாகவும், எஞ்சியவர்கள் ஒரு அணியாகவும் வரிசை கட்டி நிற்கிறார்கள்.

இலங்கைதீவின் நிர்வாக கலாசாரம் மற்றும் அரசியல் கலாசாரத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய அவசிய சீர்திருத்தம் இது.


**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633, 0214927561

தீஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562
சந்தா : subs@deepam.lk ☎ 0768255566
விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567
செய்திகளுக்கு : news@deepamnews.com

# சொன்னார்கள்




**மகிந்த ராஜபக்ச – குருணாகல் எம்.பி**
நான் அலரி மாளிகையிலிருந்து வெளியேறி ஹெலிகொப்டரில் சென்றபோது தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. அப்போது சிறிசேன பொதுவேட்பாளர். அவரை காண முடியவில்லை. அதனால் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து விட்டு வெளியேறினேன். பாதுகாப்பு குழுவுடன் வெளியேறும்போதும் நான்தான் இலங்கையின் ஜனாதிபதியாக இருந்தேன்.




**பிடல் கஸ்ரோ – முன்னாள் கியூப ஜனாதிபதி**
இதுவே என் கடைசி உரையாக கூட இருக்கலாம். நமது லத்தீன் அமெரிக்க நண்பர்களுக்கும் பிற நாட்டு நண்பர்களுக்கும் கியுப மக்கள் எப்பொழுதும் வெற்றியாளர்களே என்ற செய்தியை தெரிவிக்க வேண்டும். நான் விரைவில் 90 வயதை தொட்டுவிடுவேன். அதன் பின்னர் நானும் மற்ற வயோதிபர்களை போலவே இருப்பேன். காலம் என்னை மறையச் செய்யும்.



**கருணாசேன ஹெட்டியாராச்சி – பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்**
பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அகற்ற வேண்டும் என்றால் அதற்கு இணையான அல்லது நாட்டைப் பாதுகாக்கக் கூடிய சட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறான புதிய பலமான சட்டம் உருவாக்கப்படும் வரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்படாது நீதியமைச்சுடன் வெளிவிவகார அமைச்சு இணைந்து புதிய சட்டமொன்றை உருவாக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது. அதன் முதற்கட்ட வரைபுப் பணிகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளன. அவசரப்பட்டு பயங்கரவாத தடுப்புச்சட்டத்தை நீக்கி, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட இடமளிக்க முடியாது.



**ரணில் விக்கிரமசிங்க – பிரதமர்**
பல்கலைக்கழக செயற்பாடுகள் குறித்து புதிய சட்டம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது. பல்கலைக்கழகங்களில் பகிடிவதை பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் ஆண் மற்றும் பெண்களை மையப்படுத்தியதான முரண்பாடுகளைத் தவிர்க்கும் வகையில் இந்த சட்டங்கள் உருவாக்கப்படவுள்ளது. இந்த சட்டங்கள் இந்த வருட இறுதிக்குள் அமுலுக்கு வரும்.



**அஜித் பி பெரேரா – அமைச்சர்**
சம்பூர் அனல்மின் நிலையம் தொடர்பாக இந்தியாவுடன் அரசாங்கம் பேசவில்லை. இந்தியாவுடன் பேசுவதற்கு எந்தக்கட்சிக்கும் உரிமையுள்ளது. ஆனால் எம்முடன் பேச கூட்டமைப்பு கோரவில்லை. சம்பூர் அனல்மின் நிலைய பணிகள் தாமதமாவதால் மன்னாரில் ஒரு கற்றாலை மின்உற்பத்தி நிலையம் உள்ளிட்ட சில மின்உற்பத்தி நிலையங்களை அமைக்கவுள்ளோம்.



**ரஞ்சன் ராமநாயக்க – அமைச்சர்**
சாதாரண மக்களின் மீது வரிச்சுமையை விதிப்பதில் எனக்கு உடன்பாடில்லை. ஆனால் மகிந்தவின் 10 ட்ரில்லியன் கடனை வைத்து எதனையும் செய்யாமல் வரிச்சுமையை ஏற்றியதால் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் ஐந்து இலட்சம் ரூபா வரிச்சுமையுடன் பிறக்கிறது.

# க்ளிக் பக்கம்




படப்பிடிப்பாளர்: **ந.கரண்**
இடம்: **திருவல்லிக்கேணி**

இயற்கையின் அரிய காட்சியொன்று.
**என்னைப்பற்றி:** நான் அக்கரைப்பற்றில் சுயாதீன ஊடகவியலாளராக செயற்படுகிறேன். புகைப்படங்கள் எடுப்பதில் ஆர்வம்.



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் deepamdesk@gmail.com



## வாவ் வட்ஸ்அப்

டீவில ஒருத்தர பேட்டி எடுக்குறாங்க..
“உங்க ஆட்டுக்கு என்ன சாப்பிட குடுக்கிறீங்க..?”
“கருப்பு ஆட்டுக்கா..? வெள்ளை ஆட்டுக்கா..?!
“வெள்ளைக்கு..!”
“புல்லு..”
“அப்ப கருப்புக்கு..?”
“அதுக்கும் புல்லுதான் குடுக்கறேன்..!”
“இதை எங்க கட்டி போடறீங்க..”
“எதை கருப்பையா.? வெள்ளையையா..?!!”
“வெள்ளையை..”
“வெளிய இருக்குற ரூம்ல..”
“அப்ப கருப்பு ஆட்டை..?”
“அதையும் வெளில இருக்குற ரூம்லதான்..”
“எப்படி குளிப்பாட்டுவீங்க..?”
“எதை கருப்பையா..? வெள்ளையையா..?”
“கருப்பு ஆட்டை..?”
“தண்ணில தான்”
“அப்ப வெள்ளையை..?”
“அதுவும் தண்ணில தான்”
பேட்டி எடுக்கறவர் இப்ப கடுப்பகிறார்
“லூசாய்யா நீ, ரெண்டுக்கும் ஒரே மாதிரி தானே செய்யுற! அப்பறம் எதுக்கு திரும்ப திரும்ப கருப்பா வெள்னளயானு கேட்டுட்டே இருக்க”
“ஏன்னா வெள்ளை ஆடு என்னுது”
“அப்ப கருப்பு ஆடு..?”
“அதுவும் என்னுதுதான்”

வாவ் வட்ஸ்அப்



**www.facebook.com/thamilselvan.murukaiya**
நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் வாள்,கோடாரி, மற்றும் கூரிய ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட ஒன்பது மாணவர்களின் பெற்றோர்களில் தந்தை ஒருவர் விரிவுரையாளர், மற்றுமொரு தந்தை வைத்தியார், ஒரு தாய் பிரதேச செயலக உத்தியோகத்தார். என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்த மாணவார்கள் அனைவரும் தற்போது மல்லாகம் நீதிமன்றினால் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனார்.
உன்னைச்சொல்லி குற்றமில்லை என்னைச்சொல்லி குற்றமில்லை காலம் செய்த...




**www.facebook.com/Spartacusthasan**
"ஓய்வு இல்லாமல் புலிக்கு வேலைசெய்தால் புற்றுநோய் வரலாம்". வைத்தியர் ஜெயன் தேவா (இப்போது சந்தேகங்கள் வருவது தவிர்க்க முடியாததாகிறது? )




**www.facebook.com/vanathan**
கடந்த சில நாட்களாக சில பதிவுகள் கவிதைகள் பார்க்க கிடைத்தன அதில் அதிகாமன சொற்பதிவுகள்
"மார்பு, யோனி" என்று இருந்தன சரி என்ன என்று வாசித்து பார்த்தால் இறுதியில் பெண்ணியம் சம்பந்தமான பதிவாம் என்று சொல்லியிருக்காங்க
சத்தியாமா ஒன்றும் புரியல பெண்ணியம் என்றால்
மேற்குறிப்பிட்ட இரண்டு விடயம் மட்டும் தான் இருக்கின்றதா? மக்களே



**www.facebook.com/rasmy mohamed**
இப்போவெல்லாம் பேஸ்புக்ல கமல் ஹாஸன் போலவே ஒன்னுமே புரியாத மாதிரியே பதிவு போடுறானுகள். ஏண்டா இப்டின்னு கேட்டா, தொப்பி அளவா இருந்தா போட்டுக்கங்கண்டு சொல்றானுகள். உன்ன எந்த கே.கூ தொப்பி தக்கிற வேலைக்குப் போகச்சொன்னான்.
அதுக்குத்தான் சிபான் டைலர் இருக்கார்தானே. அவரு பாத்துப்பாரு அத. நீரு புரியிராப் போல பதிவப் போடும்வே.
ஒரே கன்பியூசனா இருக்கு.



**www.facebook.com/magudeswaran.govindharajan**
நான் பிஸியாக இருக்கிறேன். பிஸிக்கு என்ன தமிழ் ?
பணிநெரிவு.
நெரிவு என்றால் நெரிசல்.
நான் பணிநெரிவில் இருக்கிறேன்.
நெரிவு என்பதை முன்பின் ஒட்டாகக்கொண்டு பலவகையிலும் பயன்படுத்தலாம்.



மாதகல் நுணசை ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா கடந்த வாரம் வெகு சிறப்பாக நடைபெற்றது.





மூலம்: ராவய
தமிழில்: ஹேனேகெதர பளீல்



# பிக்குமார் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்களா?

மஹிந்த ராஜபக்ஷவின் கூற்றுப்படி தற்போது நாற்பத்தியெட்டு பௌத்த பிக்குகள் கைது செய்யப்பட்டுள்ளனர். பெங்கமுவ நாலக தேரர் அவர்களின் கருத்துப்படி வெள்ளையர்களின் காலத்தில் கூட இவ்வாறான அளவு பிக்குமார்கள் கைது செய்யப்படவில்லை. அரசாங்கம் புத்த சாசனத்திற்கு எதிராக மேற்கொள்ளும் சூழ்ச்சியொன்றின் காரணமாகவே இவ்வாறு பிக்குகள் கைது செய்யப்படுகின்றனர் என்ற கருத்தை சமூகத்திற்கு ஊட்டுவதற்கே இவர்கள் இதன் ஊடாக முயற்சிக்கின்றனர். அரசாங்கம் இக்குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்க வேண்டும்.

இந்நிலையில் அரசாங்கம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள அல்லது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிக்குமாரின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியலொன்றை வெளியிட்டு, அப்பட்டியலில் உள்ளவர்கள் கைது செய்யப்பட்ட திகதிகளைக் குறிப்பிடுவதுடன், அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் இந்தளவு பிக்குமார் கைது செய்யப்பட்டுள்ளனரா, அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதை நாட்டு மக்கள் அறிந்து கொள்வர்.

புத்த சாசனத்திற்கு எதிரான சூழ்ச்சியின் பெறுபேறு என்று இவர்கள் கூறுவது உண்மையாயின், பௌத்த மதத்தை சிறப்பாகப் பின்பற்றி அதனை அலங்கரித்து, அதற்கேற்ற முறையில் தமது வாழ்வை அமைத்துக் கொண்ட பிக்குமார்களே கைது செய்யப்பட வேண்டும். ஆனால், கைது செய்யப்பட்டுள்ளவர்கள், கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் அவ்வாறு கௌரவமான பிக்குமார்களா? அல்லது பிக்கு என்ற வடிவம் மாத்திரமா? சாசனத்தை அலங்கரித்தமையினால் தான் அவர்கள் கைது செய்யப்பட்டார்களா? அல்லது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாட்டின் பொதுச் சட்டத்தை மீறியமையினால் கைது செய்யப்பட்டார்களா?

நாம் அறிந்த சில உதாரணங்களைப் பார்ப்போம்.

உடுவே தம்மாலோக தேரர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். யானைக் குட்டியொன்றைத் திருடியமை தொடர்பான குற்றச்சாட்டு காரணமாக அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அது குறித்து அவர் பொலிசாருக்கு வழங்கிய ஆரம்ப வாக்குமூலங்களில் யானைகளைக் கடத்தி விற்பனை செய்யும் ஒருவரிடமிருந்து அந்த யானைக் குட்டி தமக்குக் கிடைத்ததாக கூறியிருந்தார். பின்பு, யானைக் குட்டியை யாரோ ஒருவர் தனது பன்சலை அருகில் மறதியாக விட்டுச் சென்றிருந்தார் என்று கூறினார். இந்த இரண்டு கூற்றுக்களில் இருந்தும் தம்மாலோக தேரர் அவர்களின் பொய்யான முகம் தெளிவாக வெளிப்படுகிறது. யானைக் குட்டிகளைக் கடத்தி விற்பனை செய்வது நாட்டின் பொதுச் சொத்து தொடர்பான சட்டத்திற்கு முரணான கிரிமினல் குற்றமாகும். அவ்வாறான குற்றம் தொடர்பான சந்தேகநபர் ஒருவர் ஏன் கைது செய்யப்படக் கூடாது? பௌத்த பிக்கு என்ற அந்தஸ்து அவ்வாறான குற்றங்களை மறைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் தற்காப்புக் கருவியா?


கலகொடஅத்தே ஞானசார தேரர் ஹோமாகம நீதிமன்றத்தினுள் நுழைந்து நீதிமன்ற செயற்பாடுகளுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் முறைகேடாக நடந்து கொண்டமையினால் தான் கைது செய்யப்பட்டார். அதன் பின்பு இன்னும் சில பிக்குமார் அந்த நீதிமன்றத்தின் முன்பாக கீழ்தரமாக நடந்து கொண்டு குழப்பம் விளைவித்தமையினாலேயே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இவர்கள் அனைவருக்கும் எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு பிக்குமார் ஒழுக்கமுறை தொடர்பானதல்ல. நாட்டின் பொதுச்சட்டத்தை மீறியமை தொடர்பாகவாகும். அதற்கு மேலதிகமாக கைது செய்யப்பட்டுள்ள அல்லது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிக்குமார் ஒன்றில் பாதாள உலக நபர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் அல்லது பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள். அல்லது வேறு சட்டங்களை மீறிய பிக்கு சந்தேக நபர்கள் ஆவர்.


நாட்டின் சட்டத்தை எவரும் மீற முடியாது. அவ்வாறு மீறுபவர்களின் அந்தஸ்தை நோக்காமல் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். பிக்கு அந்தஸ்து என்ற போர்வையில் அவ்வாறான குற்றங்களிலிருந்து தப்பிக்க முடியாது. நாட்டின் குறித்ததோர் சட்டத்தை மீறுபவர்களைக் கைது செய்ய வேண்டும் என்று சட்டம் கூறும் எனின், அவர் பிக்கு அந்தஸ்தோ அல்லது வேறு எந்த அந்தஸ்தில் காணப்பட்டாலும் அதனைக் கருத்திற் கொள்ளாது அவர் கைது செய்யப்பட வேண்டும். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது புத்த சாசனத்திற்கே பயனளிக்கும். அதன் மூலம் காவியுடையினைப் போர்த்திக் கொண்டு புத்த சாசனத்தை இழிவுபடுத்துபவர்கள் சமூகத்தின் முன்னிலையில் தோலுரிக்கப்படுகின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சட்டத்தை மீறுபவர்கள் மிகுந்த அந்தஸ்தையும், மதிப்பையும் பெற்றிருந்தனர். உடுவே தம்மாலோக தேரர் திருட்டு யானையொன்றைத் தன்வசம் வைத்திருக்கும் குற்றத்தை இழைத்துக் கொண்டே மஹிந்த ராஜஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல வைப்பதற்காக இராணுவத்தினரின் அனுசரணையில் தர்ம போதனை நிகழ்ச்சிகளை நாடுபூராகவும் நடாத்திச் சென்றார். யானைக் கடத்தல் வியாபாரம் தொடர்பாகப் பிரபல்யம் பெற்ற பன்னிப்பிட்டி தெவ்ரம் வெஹெரவின் அனைத்து நிகழ்வுகளிலும் ஒரு பக்தராக மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார். தமிழ் முஸ்லிம் மக்களுக்கு எதிராக குரோதத்தை விதைக்கும் வகையில் மக்களைத் தூண்டி, மக்களின் தனிப்பட உடைமைகளினுள் அத்துமீறி நுழைந்தவாறு நாடு முழுவதும் ஓடித்திரிந்த கலகொடஅத்தே ஞானசார தேரர் அக்காலத்தில் அரசாங்கத்தினால் மரியாதைக்குரியவராக கண்ணியப்படுத்தப்பட்டார். கோடாபய ராஜபக்ஷவின் உதவியும் ஒத்தாசையும் அவர்களுக்குக் கிடைத்தது. ராவணா பலய போன்ற அடிப்படைவாதக் குழுக்களின் பிரதான பிக்குமார்களுக்கு பெரியியற் கூட்டுத்தாபனத்தின் வாகனங்கள் அதற்குப் பொறுப்பாயிருந்த விமல் வீரவங்சவின் உத்தரவுப்படி வழங்கப்பட்டன.

இவ்வளவு காலமும் நித்திரையில் ஆழ்ந்திருந்த நாட்டின் சட்ட இயந்திரம் தற்போது மிகவும் மெதுவாகவாயினும் செயற்பாட்டுக்கு வர ஆரம்பித்துள்ளது. சட்டத்தின் பிடியில் தாம் சிக்கும் நிலை ஏற்படும்போது தான் இக்குற்றவாளிகளுக்கு பௌத்த மதத்திற்கெதிரான சூழ்ச்சி நினைவுக்கு வருகிறது.

இக்குற்றவாளிகளின் அந்தஸ்தைக் கருத்திற் கொள்ளாமல், அவர்கள் பிக்குமாரா இல்லையா என்று பாராமல் சட்டத்தைச் சமமான முறையில் அமுல்படுத்துவதற்காகவே கடந்த ஜனவரி 08 ஆந் திகதி மக்களின் ஆணை கிடைக்கப் பெற்றது என்பதே இங்கு முக்கியமானது.







# நாவாந்துறையில் இருந்தும் இல்லாத நூலகம்

செல்வா

புத்தகத்தை வாசிக்கும் போது ஒருமனிதன் பூரணமடைகின்றான். வாசிப்பின் மூலம் நல்ல சிந்தனை பிறப்பதால் அவன் சமூகத்தில் நல்லவனாக வாழ்வது மட்டுமல்ல பிறரையும் அந்தவழிக்கு இழுத்துச் செல்கிறான். உலகப் பிரசித்தி பெற்றவர்கள் கூடுதலாக வாசிப்புப் பழக்கத்தைக் கொண்டவர்களாகவும் விளங்குகிறார்கள். அதனால் தான் ஊர்களில் நூலகங்களைத் திறந்தார்கள் முன்னோர்கள்.

ஊருக்கு ஒரு நூலகம் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் பெரியவர்கள் தொடக்கம் சிறியவர்கள்வரை சிறந்த நூல்களைப் படித்து சமூகத்தை முன்னேற்ற முயற்சி செய்வார்கள். ஆனால் பல ஊர்களில் நூலகங்களே இல்லை. அந்த ஊர்களில் படித்தவர்கள் இருந்தும் தமது ஊரில் ஒரு நூலகத்தை நிறுவ முன்வராததால் வாசிப்புப் பழக்கம் அருகிவருகிறது. சில ஊர்களில் நூலகங்கள் இருந்தும் சீரான பராமரிப்பின்றி கைவிடப்பட்ட நிலையில் சிதைவடைந்து வருகின்றன. சில ஊர்களில் புதிதாக நூலகம் கட்ட வெளிக்கிட்டு முழுமையாகக் கட்டி முடிக்காமல் பாதியிலேயே கைவிட்டுவிட்டுள்ளதால் சிதைவடைந்து வருகின்றன.

யாழ்ப்பாணம் நாவாந்துறையில் இருந்தும் இல்லாத நூலகம் ஒன்று உள்ளது. இதற்கென 2009 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாநகரசபையால் புதிதாக ஒரு கட்டடத்தை கட்ட ஆரம்பித்து அது பாதியிலேயே நின்றுவிட்டது. இதனால் கடற்றொழிலாளர்கள் தமது தேவைக்கு பயன்படுத்துவதற்காக கட்டப்பட்ட சிறிய மண்டபத்திலேயே நாவாந்துறை நூலகம் இன்றும் இயங்குகிறது. இந்த நூலகம் கூரை சிதைவடைந்து காணப்படுவதால் மழைகாலங்களில் உள்ளே மழைநீர் வருகிறது. இதனால் பத்திரிகைகள், சஞ்சிகைகளை பாதுகாக்க முடியவில்லை. எனவே வெளியே இவற்றை எடுத்து அந்தப் பகுதியில் வசிக்கும் தனியார் வீடுகளில் பாதுகாப்பாக வைக்கிறார்கள். மழைகாலம் முடிவடைந்ததும் மீண்டும் அந்த நூலகத்தில் வைத்து விடுகிறார்கள்.


யாழ்ப்பாண மாநகரசபையால் 1971 இல் இந்த நூலகத்திற்கான புதிய கட்டடத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுத்தான் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பிறகு எப்படி கட்டடம் கட்டிமுடியாமல் பாதியிலே நின்று விட்டது? இதற்கென ஒதுக்கப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது என்ற வினாவுடன் நாவாந்துறைப் பிரதேசத்திற்குள் தீபம் செய்தியாளர்கள் சென்றார்கள். நிரந்தர கட்டட வசதியில்லாத போதும் நூலகம் ஒன்றை இயக்கவேண்டும். அப்பொழுதுதான் நாளைய தலைமுறையின் எதிர்காலம் சிறந்து விளங்கும் என்ற கனவுடன் நாவாந்துறைப் பிரதேசமக்கள் நூலகம் ஒன்றை இயக்கிவருகிறார்கள்.




**பொ.வாகீசன்**
**யாழ்.மாநகர சபை ஆணையாளர்**

யாழ் பொதுநூலகத்தின் கிளைதான் இந்த நாவாந்துறை நூலகம். இங்கு பத்திரிகைகள், சஞ்சிகைகள் மட்டும் போடப்படும். இந்த நூலகத்துக்கு 2009 ஆம் ஆண்டு மாநகரசபையால் புதிய கட்டடம் கட்டப்பட்டு நிதி போதுமானதாக இல்லாததால் பூர்த்தி செய்யப்படாமல் அரைகுறையில் கைவிடப்பட்டு இருந்தது. 2016 பஜெட்டில் இந்தக் கட்டடத்தைக் கட்டிமுடிப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டட வேலைஆரம்பிக்கப்படவுள்ளது.

**ம. பவுலிஸ்**
**நாவாந்துறை**




1971 காலப் பகுதியில யாழ்.மாநகர சபை ஆணையாளராக இருந்த வீரசிங்கம் ஊடாகத் தான் இந்த நூலகம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது இந்த நூலகத்திற்குள் போவதற்கு வாசகர்கள் பயப்படுகிறார்கள். கட்டடம் வெடித்திருப்பதால் விழுந்துவிடுமோ என்ற பயம் இருக்கிறது. சஞ்சிகைகளை வெளியே கொண்டுவந்துதான் வாசிக்கிறார்கள். இதற்கான புதியகட்டடம் கட்டி அரைகுறையில் இருக்கிறது. அரச அரசசார்பற்ற நிறுவனங்களிடம் முறையிட்டும் இதுவரை எந்தப் பயனும் கிடைக்கவில்லை. புதிய ஆணையாளரை நாங்கள் இன்னும் சந்திக்கவில்லை. ஆனால் கடந்தமாதம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளோம். அவரையும் சந்தித்து இந்தவிடயம் சம்பந்தமாக கதைக்கவுள்ளோம். முன்னாள் மாநகர சபை மேஜரிடம் அடிக்கடி போய் கடிதம் கொடுத்து கதைத்தும் எந்தப் பயனும் கிடைக்காததால் மாநகர சபை பக்கமே போக மனமில்லாமல் இருக்கிறது.



**வி.எட்வேட்**
**நாவாந்துறை**

யாழ் பிரதேசசெயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கூட அரைகுறையாக கட்டி பாதியில் நிற்கும் இந்த நூலகத்தை முழுமையாகக் கட்டித் தருமாறு பேசினோம். ஆனால் இன்றுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. கட்டித் தாறம் கட்டித் தாறம் என்று சொல்லி நாள் தான் போனது. கட்டடவேலை இடம்பெறவில்லை. அத்திவாரம் போட்டு துண் தான் எழுப்பியிருக்கிறார்கள். மிகுதி வேலை முடியவில்லை. இந்த மேல்மாடிகட்டடத்திற்கு ஒதுக்கிய நிதி எங்கே போய்விட்டது. இந்த நிதியை பயன்படுத்தித் தான் மாநகரசபைக்குள் ஒரு கட்டடத்தை கட்டிவிட்டதாக நாங்கள் கேள்விப்பட்டோம். கடற்றொழிலாளர் கட்டடத்தில் தான் நூலகம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இயங்குகிறது. இதற்கென ஒருகட்டடம் இல்லை. வாசிகசாலையில் இருந்து படிக்கக் கூடியதாக சரியான முறையில் தளபாடம் கூட இல்லை. முதல் ஒரு அரசியல் இருந்தது. எங்களுக்குப் பயனில்லை. இப்பொழுது மரி ஒரு அரசியல் வந்திருக்கிறது. இந்த அரசியலாலும் எங்களுக்குப் பயனில்லை.

**யே.சந்தியோ**
**நாவாந்துறை**



சிறிய கட்டடத்திலதான் இந்த நூலகத்தை திறந்து நடத்தினோம். ஏனெனில் எமது பிரதேசம் பின்தங்கிய பிரதேசமாகும் இதனால் நூலகம் ஒன்றைத் திறந்தால் எதிர்காலம் சிறந்து விளங்கும் என்ற நம்பிக்கையில் உரிய கட்டடம் இல்லாதபோதும் நூலகத்தை திறந்தோம். காலப்போக்கில் இதற்கு நிரந்தர கட்டட வசதியிருக்கவேண்டும் என்பதற்காக மாநகரசபையிடம் மனுக் கொடுத்து நிதி ஒதுக்கப்பட்டது. நிதி ஒதுக்கியும் கட்டடம் முழுமையாக கட்டப்படாமல் அரைகுறையாக இருப்பதால் அதுவும் மழைவெயிலில் இருந்து சேதப்பட்டுவருகிறது. புதியஆணையாளர் இதில் ஆர்வமாக இருக்கிறார் என்று அறிகிறோம். அதனாலே அவரிடம் இந்தக் கோரிக்கையை வைக்கிறோம்.







# இந்தியக் கண்ணாடியால் காணும் இலங்கைத் தமிழர் போராட்டம்!


ஞானி

'உலகத் தமிழினத் தலைவர் கலைஞர்' என்ற கனவைத் கலைத்தற்காக கருணாநிதியும் தி.மு.கவும் பிரபாகரன் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் கொண்டிருந்த சினம் இன்னமும் ஆறவில்லை என்பதை தற்போதைய செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. கொடூர யுத்தத்தின் வலியிலிருந்து ஈழத்தமிழர்கள் மீளமுடியாத தருணத்தில் யாழ்ப்பாணத்திற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட தி.மு.க எம்.பி பாலு "உங்களுக்கும் தலைவர் கலைஞர் தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்" என்று அறிவுறுத்தினார். பிரபாகரன் என்ற பெயர் மீது தி.மு.க கொண்டிருந்த வெறுப்பு அந்த அறிவுறுத்தலில் தொனித்தது. பிரபாகரன் தொலைந்து போய்விட்டார் தானே இனிமேலாவது கலைஞரை உங்கள் தலைவராக ஏற்றால் என்ன என்று கேட்காமல் கேட்டார் டி.ஆர்.பாலு.

இலங்கை அரசியலும் இந்திய அரசியலும் வெவ்வேறானவை. ஒன்றுடன் ஒன்று ஒப்பிட முடியாதவை. பாணிகளும் வழிகளும் எதிர்எதிரானவை. இந்திய அரசியல் போலத்தான் இலங்கை அரசியலும் தமிழர் போராட்டங்களும் அமைந்திருக்கும் என்ற யூகங்களும் கற்பிதங்களும் முழுக்கத் தவறானவை. கருணாநிதியின் வாழ்க்கை திரைப்படமாகிறது என்ற செய்தி வெளியானதும் "ஒரு படத்தில் ஐந்து கதாநாயகிகளா?" என்று இணையத்தில் ஒருவர் கேள்வி கேட்டிருந்தார். தேர்தல் நடந்தால் முன் பக்கத்தில் கருணாநிதியின் மனைவி வாக்களிக்கிறார் என்று ஒருவரின் படம் பிரசுரமாகும். உள்பக்கத்தில் கருணாநிதியின் துணைவி வாக்களிக்கிறார் என்று வேறொருவரின் படம் வெளியாகும். இதெல்லாம் இந்தியப்பாணி. இந்திய வாக்காளர் இதனை ஏற்றுக்கொள்வார்கள். அது அவர்களது முடிவு.

ஈழத்தின் நிலைமை வேறு மாதிரி. அங்கு தனிநபர் ஒழுக்கம் பிரதானமாக நோக்கப்படும். ஜி.ஜி. பொன்னம்பலம் செல்வநாயகம் காலமாயினும் அதற்கு முந்திய பிந்திய காலங்களிலும் தலைமைக்கான தகுதிகளில் இதுவே தேவை. புலிகள் காலத்தில் அரசியல் ரீதியாக அமிர்தலிங்கம், டக்ளஸ் போன்றோருடன் முரண்பாடு இருந்தது. இந்த மாபெரும் யுத்தத்தை நடத்திய சிங்களமும் கூட புலிகளின் ஒழுக்கம் குறித்துக் கொச்சைப்படுத்தியதில்லை. அவ்வாறு செய்தால் சிங்களவர்கள் கூட ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று தெரிந்திருந்தது.





பி.ஜே.பி அரசிலும் காங்கிரஸ் அரசாங்கத்திலும் மந்திரிப் பதவிகள் வகித்த தி.மு.கவினால் முகாம்களில் இருக்கும் தமிழருக்கு இந்தியக் குடியுரிமையோ இரட்டைக் குடியுரிமையோ பெற்றுக் கொடுக்கக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மனமில்லாமல் போய்விட்டது

தமிழகத்தின் தலைமைக்கான கண்ணாடியைப் போட்டுப் பார்த்தாலோ என்னவோ சிவகாமி ஐ.ஏ.எஸ்.என்பவர் "போராட்டத்துக்காகச் சென்ற பெண்களைப் புலிகள் தமது பாலியல் தேவைகளுக்காகப் பயன்படுத்தினர்" என்று கூறியுள்ளார். புதியதலைமுறை தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றிலேயே இவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவரது கூற்றில் குளிர்ச்சியடைந்த கனிமொழியின் தந்தை இவருக்கு எதிர்வரும் தேர்தலில் தமது தலைமையிலான கூட்டணியில் பெரம்பலூர் தொகுதியில் தி.மு.க சின்னமான உதயசூரியனில் போட்டியிட வாய்ப்புக் கொடுத்துள்ளார். இவரது கருத்தைக் கனிமொழியும் ஏற்றுக் கொண்டதாகத்தான் எண்ண வேண்டியுள்ளது. இல்லையேல் அவர் தமது ஆட்சேபனையைத் தெரிவித்திருப்பார்.

ஏற்கனவே பார்வதியம்மாள் சென்னை விமான நிலையத்தில் வைத்துத் திருப்பியனுப்பப்பட்டார். இதன் மூலம் பிரபாகரன் மீதான வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டார் கருணாநிதி. ஈழவிவகாரத்தில் உண்மைக்குப் புறம்பானவற்றையே பேசுவதை வழக்கமாகக் கொண்டவர் அவர். "ஜெயலலிதா முன்னர் எழுதிய கடிதத்தின் அடிப்படையிலேயே மத்திய அரசு அனுமதிக்கவில்லை" எனச் சமாதானம் சொன்னார். ஜெயலலிதா புலிகளை எதிர்த்த காலத்திலும் தனது கருத்தில் மூர்க்கமாக இருந்தவர். வளவளத்த நிலைப்பாடு கொண்டவரல்ல. ஜெயலலிதா கடிதம் எழுதிய காலத்தில் பா.ஜ.க ஆட்சியில் இருந்தது. கருணாநிதி குடும்பத்தைச் சேர்ந்தவர் உட்பட மூன்று தி.மு.க வினர் அப்போது மத்திய அமைச்சர்களாக இருந்தனர். ஜெயலலிதாவின் கருத்தை நிராகரிக்கும்படி இவர்கள் ஏன் அமைச்சரவையில் கூறவில்லை? தனது தவறுகளுக்கு மற்றவர்களைப் பொறுப்பாளியாக்குவதில் கருணநிதிக்கு நிகர் வேறு எவரும் இல்லை. இதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருந்ததில்லை.

"காந்தளகம்" எனும் பதிப்பகத்தை நடத்தி வருபவர் மறவன்புலவு சச்சிதானந்தம் என்பவர். இவர் மீது இலங்கைக்கு மருந்து அனுப்பச் சதி செய்தார் எனக் குற்றம்சாட்டி வழக்குத் தொடர்ந்தது கருணாநிதி அரசு. போதைப் பொருளைக் கடத்தினார் அல்லது பெறுமதியான பொருட்களைக் கடத்த சதி செய்தார் என்று குற்றம்சாட்டுவது என்பது வேறு. ஆனால் மருந்துப் பொருட்களைக் கடத்தச் சதி செய்தார் என்பதுதான் உலகத் தமிழினத்தின் தலைவராகக் கனவுகாணும் கருணாநிதியின் ஆட்சி மத்திய குற்றச்சாட்டு. மருந்துத் தடையால் உயிரிழக்கும் தமிழரின் உயிரைக் காப்பாற்றப் பலரும் சாத்தியமான வகையில் உதவினர். ஆனால் தனக்கு வாக்களிக்க முடியாத தமிழர் உயிரிழந்தால் தான் என்ன என்று கருதினார் கருணாநிதி.

இலங்கைத் தமிழரில் தேர்ந்தெடுக்கப்பட்டோரைத் தனியாகப் பிரித்து "சிறப்புமுகாம்" என்ற கொடுஞ் சிறையொன்றை ஆரம்பித்த வரலாறும் கருணாநிதிக்கே உண்டு. புலம்பெயர் நாடுகளில் குறிப்பிட்ட காலத்தின் பின் அந்நாட்டின் பிரசைகளாகத் தமிழர்களை ஏற்றுக் கொள்ளவதுண்டு. பி.ஜே.பி அரசிலும் காங்கிரஸ் அரசாங்கத்திலும் மந்திரிப் பதவிகள் வகித்த தி.மு.கவினால் முகாம்களில் இருக்கும் தமிழருக்கு இந்தியக் குடியுரிமையோ இரட்டைக் குடியுரிமையோ பெற்றுக் கொடுக்கக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மனமில்லாமல் போய்விட்டது.

இந்திய இராணுவத்தின் இலங்கைப் பிரசன்னத்தை எதிர்த்து வைக்கோவின் அழுத்தத்தால் கண்டன நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது தி.மு.க அக்கால கட்டத்தில் எம்.ஜி.ஆர் மறைந்தார். நன்றிக் கடனாகவும் எம்.ஜி.ஆருக்கு அஞ்சலி செலுத்து முகமாகவும் பிரபாகரனும் எம்.ஜி.ஆரும் ஒன்றாக இருக்கும் படங்களைத் தமிழகமெங்கும் சுவரொட்டிகளாக ஒட்டினர் புலிகள். இதனைக் கண்ணுற்றதும் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட கண்டன நடவடிக்கைகளை ரத்துச் செய்தார் கருணாநிதி. மறைந்த ஒருவருக்குச் செய்யும் அஞ்சலி நடவடிக்கைகளில் கூட அரசியல் லாபநட்டக் கணக்குப் பார்ப்பவர் அவர். அவரைப் பொறுத்தவரை தான் கூப்பிட்டால் வரும் நாய்க்குட்டிகளாகப் புலிகள் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. முதன் முதலாகப் புலிகள் முதல்வர் எம்.ஜி.ஆரைச் சந்திக்க இருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்ததும் அந்தச் சந்திப்புக்கு முதல் நாள் தன்னைச் சந்திக்க வேண்டுமென்றார்.

எம்.ஜி.ஆருடைய சந்திப்புக்கான திகதி பலநாட்களுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையில் தமிழக அரசியல் விளையாட்டுக்குள் பகடைக்காய்களாகத் தம்மைப் பயன்படுத்துவதைப் பிரபாகரன் விரும்பவில்லை. ஆகவே முதல்வருடனான சந்திப்புக்கு பிறகு ஒருநாளில் சந்திக்கலாம் எனத் தகவல் அனுப்பினார். இதனை ஜீரணிப்பது கருணாநிதிக்குச் சிரமமாக இருந்தது. புலிகள், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ் ஆகிய நான்கு இயக்கங்களுக்கும் கொடுக்கவிருந்த தலா இருபத்தையாயிரம் ரூபாவில் புலிகளுக்கு என ஒதுக்கிய இருபத்தையாயிரத்தை டெலோ இயக்கத்துக்கு வழங்குவதாக அறிவித்தார். இதற்கு ஒரு காரணம் இருந்தது. 1980 களில் இலங்கைத் தமிழர் நலனின் ஒட்டுமொத்தக் குத்தகைக்காரர் தான் தான் என்ற மாதிரி பிம்பத்தை உருவாக்க அவர் முயற்சித்தார். எம்.ஜி.ஆர் மலையாளி என மறைமுகமாகவும் சுட்டிக்காட்டுவார். அதனால்தான் இலங்கைத்

தமிழர் நலனுக்கு போதிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்றும் குற்றம்சாட்ட முயற்சித்தார். பொறுமையிழந்த எம்.ஜிஆர் "கருணாநிதி தனது ஆட்சிக் காலத்தில் குட்டிமணியை ஸ்ரீலங்கா பொலிசாரிடம் ஒப்படைத்தவர்தானே" என்று கேட்டார். இதனால் வெலவெலத்தார் கருணாநிதி.

அக்கால கட்டத்தில் ரெலோவில் ராசப்பிள்ளை, ஸ்ரீசபாரத்தினம், ஒபரோய்தேவன் (வறுவா) சின்னவறுவா, சுதன், சாரதி(ரமேஷ்) முரளி, ரூபன் செல்வம் (ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் தற்போதைய குழுக்களின் பிரதித்தலைவர்) உட்பட பன்னிரண்டு போராளிகளே இருந்தனர். ராசப்பிள்ளை தலைவராக இருந்தாலும் சில காரணங்களால் நடைமுறையில் ஸ்ரீசபாரத்தினத்தின் செல்வாக்கே அங்கு மேலோங்கி இருந்தது. ஆகையால் ஸ்ரீசபாரத்தினத்தைத் தொடர்பு கொண்ட தி.மு.கவினர் அவரது பெயரில் ஒரு அறிக்கையை வெளியிடச் செய்தனர். "தமிழீழ விடுதலை இயக்கம்" என்ற பெயரில் உத்தியோகபூர்வமாக வெளிவந்த முதலாவது அறிக்கை அதுதான். அதில் செயலதிபர் என்று ஸ்ரீசபாரத்தினம் கையொப்பம் இட்டிருந்தார். "குட்டிமணியை ஸ்ரீலங்கா பொலிசாரிடம் ஒப்படைத்த போது அவர் ஒரு போராளி என்ற விடயம் கருணாநிதி தலைமையிலான தமிழக அரசுக்குத் தெரியாது" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறு தன்னைப் பெரும் இக்கட்டிலிருந்து காப்பாற்றிய ஸ்ரீசபாரத்தினத்தின் மீது கருணாநிதிக்கு அபிமானம் இருந்தது. அதனை நிரூபிக்கும் வகையில் தான் சிறையிலிருந்த போது கதைவசனம் எழுதிய "பாலைவன ரோஜாக்கள்" என்ற திரைப் படத்தின் (சத்தியராஜ், பிரபு நடித்தது) ஒரு கதாபாத்திரத்துக்கு சபாரத்தினம் எனப் பெயர் சூட்டினார்.




தி.மு.க, டெலோவுக்கு சார்பாக இருந்த போதும் வை.கோ, சுப்புலட்சுமி ஜெகதீசன் போன்றோர் புலிகளுக்கு ஆதரவாகஇருந்தனர். எனினும் தனது சொல்கேட்காத புலிகள் மீது கருணாநிதி கொண்டிருந்த வன்மம் மட்டும் அப்படியே இருந்தது. அதன் தொடர்ச்சியே சிறப்பு முகாம், பார்வதியம்மாளுக்கு அனுமதி மறுப்பு, இறுதிப் போரில் ஸ்ரீலங்கா அரசுக்கு மறைமுக ஆதரவு, 7 பேரின் விடுதலையில் தசாவதார நடிப்பு என தொடர்ந்தது. இப்போது உலகத்திலேயே ஒழுக்கம்மிக்க போராளி அமைப்பாக இருந்த புலிகளைக் கொச்சைப்படுத்திய சிவகாமி ஐ.எ.எஸ்க்கு உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடச் சந்தர்ப்பம்.

இலங்கைப் பிரச்சினைக்காக சட்டமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலகியதாக கூறியதும் ஒரு நாடகமே. தி.மு.க உறுப்பினர்களின் மரணம் காரணமாக நடைபெறும் இடைத் தேர்தல்களில் அ.தி.மு.க வேட்பாளர்களே வெற்றி பெற்று எதிர்க்கட்சித் தலைமை கூடப்பறிபோகும் சூழலில் தான் இவர் ராஜினாமா செய்தார். அடுத்த எதிர்க்கட்சித் தலைவராக கருணாநிதிக்கு மாற்றாக தி.மு.கவில் ஒருவர் உருவாகிவிட்டார் என்ற நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே அன்பழகனையும் ராஜினாமா செய்ய வைத்தார். இருவரும் ராஜினாமா செய்ததும் காங்கிரஸ் எதிர்க்கட்சியாகிவிட்டது.

சிவகாமி ஐ.எ.எஸ் போட்டியிடும் தொகுதியில் வைகோவோ, சீமானோ, திருமாவளவனோ, வீரலட்சுமியோ போட்டியிடப் போவதில்லை. எல்லோரும் தத்தமக்குச் சாதகமான தொகுதியில்தான் போட்டியிடப் போகின்றனர். கூடா நட்பு கேடாய் முடியும் என்று குறிப்பிட்ட கருணாநிதி இன்னமும் எழுவரின் விடுதலையை எதிர்க்கும் காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்திருக்கிறார். இது இந்திய அரசியல். எனினும் கட்சிக்குள் தமது பரம்பரை உரிமையை தக்கவைக்கத் தடையாக இருந்த வைகோவை அகற்ற அல்லது அகல வைக்க புலிகளின் மீது பழியைப் போட்ட கருணாநிதியின் செயல் குள்ளத்தனமானது.

தி.மு.கவில் முன்னர் தீப்பெரி ஆறுமுகம் என்றொரு பேச்சாளர் இருந்தார். அவர் தனது பேச்சை ஆரம்பிக்க முன்னர் "எனது உரையை தொடங்க முன்னர் இங்குள்ள பெண்களை வெளியேறுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் எனது பேச்சு அப்படி இப்படி இருக்கும்" என முன்னுரையாகக் குறிப்பிடுவார். அதற்கு ஏற்றவாறு பேச்சும் விரசமாகவும் நாகரிகமில்லாமலும் இருக்கும்.

இவ்வாறன கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தாலோ என்னவோ சிவகாமி ஐ.ஏ.எஸ் கருத்து தீப்பெரி ஆறுமுகத்தின் பாணியில் உள்ளது. "வாழும் வள்ளுவர்" போல காதலி மனைவி அடுத்த மனைவி துணைவி என்று "நல்லறத்தில்" ஈடுபடாமல் கணிசமான புலிகள் உறுப்பினர்கள் தமது வாழ்க்கைத் துணையைத் பெண் உறுப்பினர்களில் இருந்து தேர்ந்தெடுத்து ஒருவரோடு ஒருவர் மட்டும் உறவு கொண்டு வாழ்க்கை நடத்தியது இவர் எதிர்பார்க்கும் பண்பாட்டுக்கு விரோதமாக இருக்கலாம். இவரது கருத்தை கி.வீரமணி, சுபவீரபாண்டியன் போன்றோர் கூட ஆட்சேபிக்கவில்லை. எத்தனையோ ஏமாற்றங்களை சந்தித்த ஈழத்தமிழினத்துக்கு இது ஒன்றும் புதிதல்ல.





சண்டிலிப்பாய் சீரணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா கடந்த வாரம் நடைபெற்றது.






# எக்ஸாம் என்ரரெயின்றமென்ற்

செல்வம்
selvam@deepam.lk


த.ஜனனி


த.வினோதா


யோ.ஹேமலக்ஷி

எக்ஸாம் என்ரரெயின்மென்றிற்காக இந்த வாரம் சென்றது யாழ்ப்பாணத்தின் சிறுப்பிட்டி பகுதிக்கு. நான்கு கேள்விகளுடன் சென்ற நம்மிடம் 'சவாலே சமாளி' என வந்தவர்கள் ஆறு பேர். ஜனனி, வினோதா, ஹேமலக்ஷி, நியூனா, தமிழினி, கோகீதன். சில கேள்விக்கு சட்புட் என்றும், சில கேள்விக்கு திருதிரு என விழித்தும் அவர்கள் சொன்ன விடையின் தொகுப்பு.

**கேள்வி: அண்மையில் நாடு முழுவதும் மின்தடை ஏற்பட்டதற்கு காரணம் என்ன?**
பதில்: பியகம உபமின் நிலையத்தில் கோளாறு ஏற்பட்டதால்

***த.ஜனனி:*** எங்கட வீட்டில பல்ப் எரியாத படியால் மின்தடை ஏற்பட்டுட்டுது என்பதை கண்டுபிடித்தோம். ஆனால் மின்தடை ஏன் ஏற்பட்டது என்பது தெரியாது.

***த.வினோதா:*** மின்தடைக்கு பலமாதிரி சொன்னார்கள். நாங்கள் ஒன்றையும் நம்ப வில்லை. அதனால நம்பி ஒரு காரணத்தையும் சொல்ல முடியவில்லை.

***யோ.ஹேமலக்ஷி:*** என்ஜினில பெரிய பழுதாக இருக்கலாம். அதனைத் திருத்த முடியாமல் கஷ்டப்பட்டிருப்பார்கள். எங்கட ஊரில நன்றாகத் திருத்தக் கூடியவர்கள் இருக்கிறார்கள். கேட்டிருந்தால் அவர்களை அங்கு அனுப்பி திருத்தியிருப்போம்.

***இ.நியூனா:*** எங்கட ஊரில அடிக்கடி கரண்ட் இல்லாமல் போறது வழக்கம். அதுக் கெல்லாம் யார் காரணம் சொல்லுகினம்? அதனால நாடு முழுவதும் கறண்ட் கட்டான திற்கு நாங்கள் காரணம் கேட்கவில்லை. நீங்களே சொல்லிவிடுங்க. இனியாவது தெரிஞ்சு வைச்சிருப்பம்.

***சி.தமிழினி:*** கறண்ட் கட் ஆனது தெரியும். ஏன் என்றுதான் தெரியவில்லை. அடிக்கடி டீசல் விலையில் மாற்றம் கொண்டு வருவதால் டீசல் இல்லாமல் நின்றுதோ என்னவோ.

***இ.கோகீதன்:*** ஒழுங்காக இயந்திரத்தை இயக்க முடியாமல் போயிருக்கலாம்.

**கேள்வி: கிளிநொச்சி அரசஅதிபரின் பெயர்என்ன?**
**விடை: சுந்தரம் அருமைநாயகம்**

***த.ஜனனி:*** (சிரிக்கிறார்) ஏன் இந்த கொலைவெறி... முன்னர் யாழ்ப்பாணத்தில இருந்தவர்தான் அங்கே போனவர். ஆனால் பெயர்தான் வரமாட்டேங்குது.

***த.வினோதா:*** (கேள்வியை கேட்டதும் முழிக்கிறார்)

***யோ.ஹேமலக்ஷி:*** கேள்விப்பட்டதே இல்லை. அவரிட்ட ஏதாவது அலுவலுக்குப் போனால்தானே தெரியும். யாழ்ப்பாண மாவட்ட அரச அலுவலகம் பக்கமே நான் போறதில்லை. பிறகு எப்படி கிளிநொச்சி அரச அதிபரைத் தெரியும்.

***இ.நியூனா:*** கிளிநொச்சி மாவட்டமா ஆஆஆ... (இழுக்கிறார்) ம்ம்ம்... (சட்டு புட்டுன்னு ஏதாவதொரு முடிவுக்கு வாங்கம்மா)

***சி.தமிழினி:*** ஐயோ... ஆளைத்தெரியும் பெயர்தான் வருதில்லை. அடிக்கடி நியூஸ் வாறது.. வருதில்லையே...

***இ.கோகீதன்:*** (ஒரு மாதிரி பார்க்கிறார்) ஏன்ணா ஏன்... ஏதாவது பொதுஅறிவு சம்பந்தமான கேள்வியைக் கேளுங்கோ.

**கேள்வி: யாழ்ப்பாண வைபவமாலையை எழுதியவர்யார்?**
**விடை: மயில்வாகன புலவர்**

***த.ஜனனி:*** கார்மேகன். இல்லை...இல்லை. (வெட்கப்பட்டவர் சமாளித்துக் கொள்கிறார்) மல்லிகைப்பூ மாலையைத் தான் தெரியும். வைபவ மாலையை தெரியாது.

***த.வினோதா:*** யாழ்ப்பாண வைபவ மாலையா? இப்பிடியொரு புத்தகமா? நான் கேள்விப்பட்டதேயில்லையே.

***யோ.ஹேமலக்ஷி:*** பரராஜசேகரனா?.

***இ.நியூனா:*** பூ மாலை சம்பந்தமாக எழுதியிருப்பாரோ. புத்தகத்தை கடையில வாங்கிப் படித்தால்தான் தெரியும்.

***சி.தமிழினி:*** செகராசசேகரனாய்த் தான் இருக்கும். (விடையை சொன்னதும்... ஜஸ்ற் மிஸ் என்றார்)

***இ.கோகீதன்:*** ஐயையோ... இந்த மாலைக்கும் எங்களுக்கும் தொடர்பு இல்லை. இது பெண்களிடம் கேட்கிற கேள்வியாகும்.

**கேள்வி: யாழ்ப்பாண இடப்பெயர்வு எத்தனையாம் ஆண்டு இடம்பெற்றது?**
பதில்: 1995 ஆம் ஆண்டு

***த.ஜனனி:*** இதை எப்படி மறப்பது? 1995 இலதான் எல்லோரும் இடம்பெயர்ந்தம்.

***த.வினோதா:*** இடப்பெயர்வு இடம்பெற்றதாக கேள்விப்பட்டிருக்கிறன். ஆண்டு நினைவுக்கு வரயில்லை. தெரியாது என்று மட்டும் போட்டு விடாதீர்கள். மானம் போயிடும்

***யோ.ஹேமலக்ஷி:*** (யோசிக்கிறார்) நான் பிறக்கவில்லை என்று போடுங்கோ. ஒரு பிரச்சனையுமில்லை.

***இ.நியூனா:*** நான் பிறந்தபின் நடந்த சம்பவங்களைக் கேளுங்கோ. டாண் டாண் என்று பதில் சொல்லுவன்.

***சி.தமிழினி:*** இடம்பெயர்ந்ததாக இப்பவும் சொல்லிக் கொண்டிருப்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறன். எத்தனையாம் ஆண்டு என்று தான் நானும் கேட்காமல் விட்டுவிட்டன். நான் சொன்னதாக சரியான விடையை போட்டு விடுங்கள்.

***இ.கோகீதன:*** 1995 ஆம் ஆண்டு. எனக்கு அது தெரியாது. ஆனாலும் கேள்விப்பட்டிருக்கிறன்.



இ.நியூனா


சி.தமிழினி


இ.கோகீதன்



இந்து சமய அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது 20115 இற்கான விருது வழங்கும் நிகழ்வில் திருநெல்வேலி அறநெறிப்பாடசாலை மாணவன் செல்வன் குகதாசன் சிறிசுபதங்கன் தரம் 3 பேச்சுப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றார்.



மகிழடித்தீவு கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் புதுவருட விளையாட்டு போட்டிகள் நடந்தன.



மட்டக்களப்பு நாகசக்தி கலைமன்றத்தினால் புதுவருடப்பிறப்பை முன்னிட்டு நடத்தப்பட்ட ஊஞ்சல்விழா காட்சிகள்.



# வாளை காணோம்

## பதறுகிறார் யாழ்ப்பாண ராஜா

யாழ்ப்பாண ராஜாவின் வாளைக் காணவில்லையாம். இதை ஒரு பகிடியான செய்தியாக நினைக்காதீர்கள். உண்மையில் வாளைக் காணவில்லை என ராஜாவே அறிக்கை விட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது திருடர்கள் தொல்லை தாங்க முடியாமல்த்தான் உள்ளது. ராஜா அசந்திருந்த சமயத்தில் திருடர்கள் உருவிக் கொண்டு பறந்துவிட்டார்கள் என்றோ, இம்சைஅரசன் 23ம் புலிகேசி படத்தில் வருவதைபோல ஒரு இரசதானியை கற்பனை செய்வது போன்ற விபரீத முடிவுகளிற்கு சென்றுவிடாதீர்கள். நமது ராஜாவின் சொத்தாக இருக்க வேண்டிய பாரம்பரிய வாளைக் காணவில்லையாம். யாழ்ப்பாணம் வீரமாகாளியம்மன் ஆலயத்தில் பராமரிக்கப்பட்ட வாளைத்தான் காணவில்லையாம்.

நல்லூரை இராசதானியாக கொண்டிருந்த ஆரியச்சக்கரவர்த்திகளின் பாரம்பரிய வாள் நல்லூர் வீரமாகாளியம்மன் ஆலயத்தில் பராமரிக்கப்பட்டு வந்தது. வாள் அரசபரம்பரையில் முக்கியமான ஒருஇடத்தை வகித்து வந்தது. நல்லூரை இராசதானியாக கொண்டிருந்த ஆரியச்சக்கரவர்த்திகளின் வாழ்வில் வீரமாகாளியம்மன் ஆலயம் முக்கிய இடத்தை பெற்றிருந்தது. போருக்கு செல்வதற்கு முன்னர் தமது வாளை இந்த ஆலய சன்னிதானத்தில் வைத்து புஜை வழிபாடுகளில் ஈடுபடுவது அரசர்களின் வழக்கமாக இருந்தது. ஆரியச்சக்கரவர்த்திகளின் வழிவந்து யாழ்ப்பாணத்தை ஆண்ட இறுதி மன்னனான சங்கிலியனுக்குகூட வீரமாகாளியம்மன் ஆலயத்துடன் மானசீக நெருக்கமிருந்தது.

ஆரியச்சக்கரவர்த்திகளின் வீழ்ச்சியின் பின்னர் யாழ்ப்பாண அரசபரம்பரையின் வாள் வீரமாகாளியம்மன் ஆலயத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தது. விலைமதிக்க முடியாத இரத்தினங்கள் பொறிக்கப்பட்ட ஆறடி அரசவாள் அது. விலைமதிக்க முடியாத பொக்கிசம் அந்த வாள். எனினும் அதனை தற்போது காணவில்லையென பரபரப்பு புகார் சொல்லியுள்ளார்

யாழ்ப்பாண அரச குடும்பத்தின் நேரடி வாரிசு ராஜா ரெமீஜியஸ் கனகராஜா. நல்லூர் இராசதானியின் சங்கிலித்தோப்பு, அரசஅரண்மனைக்கு உரிமை உள்ள குடும்பத்தின் வாரிசு இவர். 2005 ஆம் ஆண்டு தொடக்கம் அரசகுடும்பத்தின் தலைமை பொறுப்பை ஏற்று வகித்துவரும் இவர் தற்போது நெதர்லாந்தில் வசித்து வருகிறார்.

விலைமதிக்க முடியாத ஆறடி வாளை தொலைத்துவிட்டு, தற்போது மூன்றரை அடி அளவு கொண்ட ஒரு மாதிரி வாளை செய்து வைத்துள்ளனர் என ராஜா பரபரப்பு அறிக்கை வெளியிட்டுள்ளார். ஆலய குருக்கள் அந்த வாளை அசன்டையீனமாக வெளியில் கொடுத்ததன் மூலம் யாழ்ப்பாண இராச தானியின் வரலாற்று பொக்கிசமொன்று கைதவறிவிட்டதென்பது ராஜாவின் கருத்து.







**சி.கமல்ராஜ்**
குருக்கள்
யாழ்.வீரமாகாளியம்மன் ஆலயம்

பூர்வீகமான இந்தக் கோயிலில் நான் ஏழாவது தலைமுறை. சங்கிலிய. மன்னனின் இரண்டு வாள்களில் ஒன்று இந்தக் கோயிலின் மூலஸ்தானத்தில் இருக்கிறது. இன்னொன்றை விடுதலைப்புலிகள் எடுத்துச் சென்றுள்ளனர். புதுவை இரத்தினதுரை வந்து எடுத்துச் சென்றார். பிறகு கொண்டு வந்து தரவில்லை.

இந்தவாளை வருடத்தில் ஒருநாள்த்தான் எடுப்போம். நவராத்திரி தினத்திலன்று வாழை வெட்டுவதற்காக வெளியில் எடுப்போம். சங்கிலிய மன்னன் பற்றிய வேறெந்த ஆவணங்களும் எம்மிடமில்லை. போருக்கு புறப்படுவதற்கு முன்னர் இந்தக் கோயிலில் வழிபட்டுவிட்டுத்தான் செல்வார். இந்தக் கோயில் வீதியிலும் போர் நடந்த வரலாறு உள்ளது. ராஜாவின் எஞ்சிய வாளை நாம் பத்திரமாக வைத்திருக்கிறோம். வாளிற்கு யார் உரிமை கொண்டாடுகிறார்கள்? ராஜாவா? அப்படி யாரும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.



குப்பிளான் வீரமனை கன்னிமார் கௌரியம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் இரதோற்சவம் கடந்த வாரம் இடம்பெற்றது.







லிந்துலை நாகசேனை பேரம் தோட்டத்தில் 185 குடும்பங்கள் சேர்ந்த 575 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இம்மக்களின் நலன் கருதி 10 லட்சம் ரூபா செலவில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பன்முகப்படுத்தபட்ட நிதியின் மூலம் 05 வருடங்களுக்கு முன் மக்களின் பாவனைக்காக குடிநீர் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது ஒரு குழாயில் வரும் நீர்க்காக பொதுமக்கள் பல மணிநேரம் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இத்தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். குடியிருப்பு பகுதிகளுக்கு பொருத்தப்பட்ட நீர் குழாய்கள் உடைந்து பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் ஓரே குழாயில் மாத்திரம் நீர் வருகின்றது.

இதன் காரணமாக இம்மக்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு குடிநீரை பெற்றுகொள்ள முடியாமல் பல சிரமங்களை எதிர்நோக்குவதுடன் நேரத்திற்கு மாணவர்கள் பாடசாலைக்கு செல்லமுடியாமலும் தொழிலுக்கு செல்பவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக இத்தோட்ட மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென இவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மக்கள் குரல்

மக்கள் குரல் பகுதியில் இந்த வாரம் விசித்திரமான பிரச்சனையொன்று பற்றி பேசப்படுகிறது. அபிவிருத்தியின்மை, அதிகாரிகளின் பாராமுகம் போன்ற விடயங்களை பேசிய மக்கள் குரல் இவ்வாரம் வித்தியாசமான பிரச்சனையொன்றை பேசவுள்ளது.

யாழ்ப்பாணம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட கலட்டி கிராமத்திலுள்ள நாய் ஒன்று ஏராளம் மக்களின் அன்றாட செயற்பாட்டிற்கு இடையுறாக உள்ளமை பற்றிய மக்களின் விசனமே இந்தவாரம் பதிவு செய்யப்படுகிறது.

கலட்டி கிராமத்திலுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டு வளர்ப்பு நாய் கலட்டி வீதியை பயன்படுத்தும் எல்லோருக்கும் நன்கு பரிச்சயமாகி விட்டது. சுற்றயல் கிராமங்கள் எல்லாம் அந்த நாயைப்பற்றி பேசுகின்றன. காரணம், இதுவரை அந்த நாய் ஐம்பதிற்கும் அதிகமானவர்களை கடித்து விட்டதாக மக்கள் கூறுகிறார்கள். நீண்ட நாளாக நீடித்துவரும் இந்தப்பிரச்சனைக்கு தீர்வுதான் இன்னும் கிட்டவில்லை.

கலட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை இந்த நாய் ஆட்டிப்படைப் பதையடுத்து விடயம் பெரும்பாலான அதிகாரிகளின் காதை எட்டியுள்ளது என்றும், ஆனால் யாரும் உரிய நடவடிக்கை எடுக்கிறார்கள் இல்லையென்பதும் மக்களின் குற்றச்சாட்டு. நாய் உரிமையாளர்களும் கிராமமக்களின் இயல்பு வாழ்வை தமது நாய் குந்தகம் செய்கிறதென்ற பொறுப்புணர்ச்சி துளியும் இல்லாமல் செயற்படுகிறார்கள் என்பதே பாதிக்கப்பட்டவர்களின் ஒட்டுமொத்த குற்றச்சாட்டு. நாயை கட்டி வளர்க்காமை, நாய் கடித்த பின்னர் சிகிச்சைக்கு செல்வதற்காக நாய்க்கு ஊசிபோட்ட அட்டையை தருமாறு கேட்டால் சாக்குபோக்கு சொல்லி தட்டிக்கழித்தல் என அவர்களின் பொறுப்புணர்ச்சியின்மையையும் அதிகாரிகள் கவனத்தில் எடுக்கவில்லையென்பது மக்களின் குற்றச்சாட்டு.




ஒரு பிரதேசத்தையே நாய் ஆட்டிப்படைப் பதையடுத்து கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபையில் இந்த விவகாரம் அலசப்பட்டுள்ளது. நாய் உரிமையாளரும் அழைக்கப்பட்டு விவகாரம் பேசப்பட்டபோதும், நாய் வாலை நிமிர்த்த முடியாததை போல நாய்க்கடியை நிறுத்த முடியவில்லை. கடந்த வாரமும் சிலர் நாய்க்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

அரியவகை விலங்கினமாக இருந்தாலும் மக்களின் இயல்பு வாழ்க்கையை சீரழித்தால் அவற்றை பொதுநன்மை கருதி சுட்டுக் கொல்லப்படுவதே வழக்கம். மிருகவதைக்கு எதிரான குரல்கள், விலங்கு பாதுகாப்பு வேறு, மனிதர்களிற்கு குந்தகம் செய்யும் விலங்குகளை பாதுகாப்பு கருதி கொல்வது வேறு.

தற்போது இலங்கையில் நாய்கள் கொல்லப் படுவது தடுக்கப்பட்டுள்ளது. அது பற்றி நாம் பேசவில்லை. ஆனால், தனியே நாய்கள் கொல்லப்படுவதை மட்டுமே தடுப்பதைவிட, நாய் வளர்ப்பவர்களிற்கு சில கண்டிப்பான சட்டதிட்டங்கள் அறிமுகப்படுத்துவதே அதிகரிக்கும் நாய்களிலிருந்து மக்கள் அசௌகரியங்களை சந்திப்பதை தவிர்க்க சிறந்த வழி. இயல்பு வாழ்க்கைக்கு குந்தகம் விளைவிக்கும் இப்படியான நாய்களை கொல்வதை சட்டம் தடுக்கிறது. அதனால் மக்கள் பெரும் சிரமங்களை சந்திக்கின்றனர். நாய்களின் வாழ்க்கை மற்றும் மனிதர்களின் பாதுகாப்பு இரண்டிற்குமிடையில் சமச்சீர் தன்மையொன்றை பேண, நாய்களை வளர்ப்பவர்கள் சில சட்டதிட்டங்களிற்கு உட்பட வேண்டியது அவசியம். பொதுமக்கள் வாழ்க்கைக்கு குந்தகம் விளைவிக்கும் நாய்களை வளர்ப்பவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதே இதற்கு சிறந்த தீர்வு.

ஐம்பது பேரிற்கும் அதிகமானவர்களை கடித்த நாய் இன்னும் எத்தனை பேரை கடிக்க வேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள் அதிகாரிகளே? இதுதான் மக்கள் உங்களை பார்த்து கேட்கும் கேள்வி.






தொகுப்பு: ஸ்ரீதர் சுவாமிநாதன்

# எம்.ஜி.ஆரின் அக்கறை



'நம்நாடு' படத்தில் ... 'வாங்கய்யா... வாத்தியாரய்யா...' பாடல் காட்சி.

**M.G.R.** படங்களுக்கு மட்டுமே உள்ள ஒரு சிறப்பு, அவர் தனது திரைப்படங்களில் பாடிய பாடல்கள், பேசிய வசனங்கள் பின்னாட்களில் அப்படியே நடந்தது வரலாறு. அதற்கு ஓர் உதாரணம்தான் 'திருவளர்ச் செல்வியோ... நான் தேடிய தலைவியோ...' என்று 'ராமன் தேடிய சீதை' படத்தில் கதாநாயகி ஜெயலலிதாவைப் பார்த்து எம்.ஜி.ஆர். பாடிய பாடல்.

ஜெயலலிதா அரசியலுக்கு வந்து சிறந்து விளங்குவார் என்பதை முதலில் கணித்ததும் எம்.ஜி.ஆர்தான். ரேகை சாஸ்திரப்படி அவருக்கு கொஞ்சம் கைரேகை பார்த்து பலன் சொல்லத் தெரியும். இதே 'ராமன் தேடிய சீதை' படப்பிடிப்பின் இடைவேளையில் ஒரு நாள் ஜெயலலிதாவின் கைரேகையைப் பார்த்துவிட்டு எம்.ஜி.ஆர், "அம்மு (ஜெயலலிதா) நீ அரசியலுக்கு வருவாய்" என்று கூறினார்.

அப்போது ஜெயலலிதா அதை மறுத்தார். "நானாவது அரசியலுக்கு வரு வதாவது? அதற்கு சான்ஸே இல்லை" என்றார். எம்.ஜி.ஆர். விடாமல், "எழுதி வைத்துக்கொள் அம்மு. நான் சொல்வது நிச்சயம் நடக்கும்" என்றார். என்ன நடந்தது என்பதைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோமே.

எம்.ஜி.ஆர். நடித்த 'பாக்தாத் திருடன்' படத்தில்பாலையாவின் ஜோடியாகஜெயலலிதாவின் தாயார் சந்தியா நடித்திருப்பார். படப்பிடிப்பைக் காண 11 வயது சிறுமியான ஜெயலலிதாவும் வந்திருந்தார். அப்போதுதான் எம்.ஜி.ஆரை முதல்முறையாக பார்த்தார். ஜெயலலிதாவின் துறுதுறுப்பும் சுட்டித்தனமும் எம்.ஜி.ஆரை கவர்ந்து விட்டது. அடுத்த சில ஆண்டுகளில் 'ஆயிரத்தில் ஒருவன்' திரைப்படம் மூலம் எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக நடிப்போம் என்று ஜெயலலிதாவுக்கு அப்போது தெரியாது. எம்.ஜி.ஆருக்கே அது தெரியாது. பின்னர், இந்த ஜோடி எம்.ஜி.ஆர். ரசிகர்கள் மத்தியிலும் திரை யுலகிலும் பெரும் வரவேற்பை பெற்றது.


'அம்மா என்றால் அன்பு... ' பாடல் ஒலிப்பதிவில் கே.வி. மகாதேவன், ஜெயலலிதா, எம்.ஜி.ஆர்.

சத்யா மூவிஸ் பேனரில் ஆர்.எம். வீரப்பன் தயாரித்து எம்.ஜி.ஆர்., ஜெய லலிதா, வாணி நடித்த திரைப்படம் 'கண்ணன் என் காதலன்'. படத்தில் ஜெயலலிதா கால் ஊனமுற்றவரைப் போல நடிப்பார். ஒரு நாள் காலை படப்பிடிப்பில் கலந்து கொண்டுவிட்டு மதியம் எம்.ஜி.ஆர். புறப்படத் தயாரானார். மதியம் அவர் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்படவில்லை. காரில் ஏறும்போது இயக்குநரிடம் "மதியம் என்ன காட்சி எடுக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டார்.

"சக்கர நாற்காலியில் இருந்து மாடிப் படியில் ஜெயலலிதா உருண்டு விழும் காட்சி..."இயக்குநரிடம் இருந்து பதில் வந்ததும் காரில் ஏறப்போன எம்.ஜி.ஆர். இறங்கிவிட்டார். "அது ரிஸ்க்கான காட்சி. நானும் உடன் இருக்கிறேன். அந்தப் பெண் (ஜெயலலிதா) விழுந்து விட்டால் என்ன ஆவது?" என்று கூறி வந்துவிட்டார்.

படியில் உருள்வது டூப்தான் என்றாலும் படியின் விளிம்பு வரை சக்கர நாற்காலியில் ஜெயலலிதா வரவேண்டும். சில அங்குலங்கள் கூடுதலாக நாற்காலி நகர்ந்தாலும் ஜெயலலிதா விழுந்துவிடுவார். எனவே, முன்னெச்சரிக்கையாக நாற்காலி சரியான தூரத்துக்கு மேல் நகர முடியாத படி நாற்காலியின் பின்னே கயிறு கொண்டு கட்டச் செய்தார் எம்.ஜி.ஆர்.

ஒத்திகையின்போது அந்த நாற்காலியில் எம்.ஜி.ஆர். தானே அமர்ந்து படியின் விளிம்பு வரை நகர்ந்து பார்த்து, அதற்குமேல் நாற்காலி உருண்டுவிடாமல் பின்புறம் கயிறு இறுக்கமாக கட்டப்பட்டுள்ளதா என்று ஒருமுறைக்கு 10 முறை உறுதி செய்த பின்னர்தான் ஜெயலலிதா நடித்த காட்சி படமாக்கப்பட்டது. அந்த அளவு உடன் நடிப்பவர்கள், ஸ்டன்ட் நடிகர்கள் ஆகியோரின் நலனில் அக்கறை கொண்டவர் எம்.ஜி.ஆர்.

ஜெயலலிதா இனிமையாகப் பாடக் கூடியவர். அதை அறிந்து 'அடிமைப் பெண்' படத்தில் 'அம்மா என்றால் அன்பு...' பாடலை இசையமைப்பாளர் கே.வி. மகாதேவன் இசையில் ஜெயலலிதாவைப் பாடச் செய்தவர்தான் எம்.ஜி.ஆர்தான்.

1971ம் ஆண்டு 'ரிக் ஷாக்காரன்' படத்தில் நடித்ததற்காக எம்.ஜி.ஆருக்கு இந்தியாவின் சிறந்த நடிகருக்கான 'பாரத்' விருது வழங்கப் பட்டது. திரையுலகிலும் அரசியல் உலகிலும் யாரும்தொட முடியாதஉச்சத்துக்குஎம்.ஜி.ஆர் சென்றதன் காரணம் என்ன? 'பாரத்' விருது பெற்றதற்காக நடிகர் சங்கம் சார்பில் எம்.ஜி.ஆருக்கு நடந்த பாராட்டு விழாவில் அதற்கான காரணத்தை ஜெயலலிதா தெளிவாக விளக்கினார். அவரது பேச்சு:

"மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். 'பாரத்' விருது பெற்றதில் ஆச்சரியம் இல்லை. அந்த விருதை அவர் பெறாவிட் டால்தான் ஆச்சரியம். தனக்கென்று அமைத்துக் கொண்ட கொள்கைகளை எம்.ஜி.ஆர். யாருக்காகவும் விட்டுக் கொடுத்தது இல்லை. அந்த பிடிவாத குணம்தான் அவரை சிறந்த நடிகராக்கி உள்ளது.

மக்களிடம் எம்.ஜி.ஆர். இவ்வளவு புகழடைந்திருப்பதற்கு என்ன காரணம்? 'மக்களிடம் லட்சியத்தின் காரணமாக எவர் பெருமையடைகிறாரோ அவர்தான் சிறந்த கலைஞராக இருக்க முடியும்' என்று ரஷ்ய எழுத்தாளர் மாக்காமோன் கூறியுள்ளார். அந்தப் பெருமைக்கு பாத்திரமாக எம்.ஜி.ஆர். இருக்கிறார். சிறந்த அரசியல்வாதியாகவும் லட்சியத் தில் தூய்மை உள்ளவராகவும் இருப்பதால்தான் இவ்வளவு பெரு மையும் எம்.ஜி.ஆருக்கு கிடைத் திருக்கிறது."

ஜெயலலிதாவைப் பற்றி எம்.ஜி.ஆர். கணித்தது சரி. எம்.ஜி.ஆர். பற்றி ஜெயலலிதா கூறியிருப்பது மிகச் சரி.

எம்.ஜி.ஆருடன் ஜெயலலிதா இணைந்து நடித்த முதல் படமான 'ஆயிரத்தில் ஒருவன்' சூப்பர் ஹிட். 2014ம் ஆண்டு தமிழகம் முழுவதும் டிஜிட்டல் முறையில் வெளியான அந்தப் படம் சென்னையில் வெள்ளிவிழாவை கடந்து 190 நாட்கள் ஓடி மறுவெளியீட்டில் வெள்ளி விழா கண்ட திரைப்படம் என்ற சாதனை படைத்தது. வெள்ளிவிழாவை முன்னிட்டு முதல்வர் ஜெயலலிதா வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் "எனது அரசியல் வாழ்வுக்கு அடித்தளமிட்ட படம்" என்று குறிப்பிட்டார். எம்.ஜி.ஆருடன் அதிக படங்களில் கதாநாயகியாக நடித்தவர் ஜெயலலிதா. மொத்தம் 28 படங்களில் எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக நடித்துள்ளார். **தொடரும்..**






மட்டக்களப்பு செங்கலடி வர்த்தகர் சங்கத்துடன் இணைந்து இலங்கை இராணுவத்தின் 11வது பீரங்கிப்படையணியினால் சித்திரைப் புத்தாண்டையொட்டி வேடிக்கை வினோத போட்டிகள் நடத்தப்பட்டன. செங்கலடி மத்திய கல்லூரி மைதானத்தில் இந்த நிகழ்வு நடந்தது.

# டூரிங் டாக்கீஸ்



## ஊற்றிக்கொடுக்கும் நடிகர்

தமிழில் சில படங்களில் நடித்தவர் நவ்தீப். தெலுங்கிலும் பிசியான நடிகராக இருந்தார். என்ன நடந்ததோ, அண்மைக்காலமாக வாய்ப்புக்கள் இல்லாமல் வீட்டில் விட்டத்தை பார்த்துக்கொண்டு உட்கார வேண்டியதாகிவிட்டது. எவ்வளவு காத்திருந்தும் வாய்ப்புக்கள் வந்தபாடில்லை. இதற்குள் சர்ச்சைகள்தான் வந்தது. வீட்டில் நிர்வாண நடனத்துக்கு ஏற்பாடு செய்ததாக சர்ச்சை எழுந்தது. இனி நடிப்பிற்காக காத்திருந்து பலனில்லை என்றதும், மதுபானச்சாலையொன்றை ஆரம்பித்துள்ளார். ஹைதராபாத்தில் பணக்கார வாலிபர்களை குறிவைத்து மதுச்சாலை ஆரம்பித்துள்ளார்.



## டாப் ஆவாரா டாப்ஸி?

தமிழ், தெலுங்கு பக்கம் டாப்ஸியால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. இதனால் பாலிவுட் பக்கம் கரையொதுங்கினார். ஹோட்டலில் தங்கியிருந்து கலைச்சேவை செய்து வந்தார். அங்கு நல்ல வாய்ப்பு கிடைத்தால் மும்பையில் சொந்தமாக வீடு வாங்கலாம் என்பது திட்டமாக இருந்தது. இப்பொழுது இரண்டு படங்கள் கிடைத்ததும், வீடொன்று வாங்கிவிட்டார். தங்கையுடன் இணைத்து நடத்தும் திருமணவரன் பதிவு தொழிலுக்கும் வீடு உதவலாமென்பதால் வாங்கியதாகவும், இனி மும்பையை மையமாக வைத்தே செயற்பட போவதாகவும் கூறியுள்ளார்.





## அஞ்சலியின் இரண்டாவது படம்

அங்காடித்தெரு படத்திற்கு பிறகு தான் நடித்த படங்களில் இறைவிதான் தனக்கு பிடித்தபடம் என்கிறார் அஞ்சலி. இடைப்பட்ட காலத்தில் பல படங்கள் நடித்தபோதும் மனதில் ஒன்றுமே நிற்கவில்லையாம். பெண்களை பெருமைப்படுத்தும் விதத்தில் இறைவி அமைந்துள்ளதாம். மனதிற்கு நெருக்கமான இப்படியான படங்கள் அமைவது கடினம். இயக்குனர் கார்த்தி சுப்புராஜினால் தனக்கு அப்படியொரு அதிர்ஸ்டம் கிடைத்துள்ளது என மெய்சிலிர்த்துள்ளார் அஞ்சலி.

## ஒருகோடி ராகுல்

ராகுல் பரீத்சிங்கும் சம்பளத்தை நன்றாக உயர்த்தி விட்டார். புதியபடங்களில் நடிக்க அவர் கேட்கும் சம்பளம் ஒரு கோடி. இளம்நடிகைகளில் நன்றாக இருப்பவர் இவர். தமிழில் ஆரம்பத்தில் நன்றாக போகவில்லையென்றாலும், தெலுங்கு திரையுலகம் ஆகா ஓகோவென தலையில் தூக்கி கொண்டாடி வருகிறது. இப்பொழுது மீண்டும் தமிழுக்கு திரும்பியுள்ளார். விஷால் நடிக்கும் புதிய படம் துப்பறிவாளன். மிஸ்கின் இயக்குகிறார். இதில் ராகுலை நாயகியாக்க பேசியபோது ஒரு கோடி சம்பளம் கேட்டுள்ளார்.



## கவர்ச்சியில்லையாம்

தமிழில் மெல்லமெல்ல பிசியான நடிகையாகிறார் நிக்கி கல்ராணி. கோ 2, மொட்டசிவா கெட்ட சிவாடா படங்கள் வரவுள்ளன. இன்னும் மூன்று படங்களில் நடித்து வருகிறார். புதிய வாய்ப்புக்களின் பின்னர் நிக்கி பேசியபோது "நடிகை ஆவேன் என முன்னர் நினைத்தும் பார்த்திருக்கவில்லை. வாழ்க்கையில் வந்ததை ஏற்றுக்கொண்டு வாழ்ந்து வந்தேன். எதையும் திட்டமிட்டு செய்யவில்லை. ஆடைகுறைத்து நடிப்பதுதான் கவர்ச்சி என்பதை ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஒருபாத்திரத்தை எப்படி தாங்கிச் செல்கிறீர்கள் என்பதை பொறுத்தே உள்ளது" என்றுள்ளார்.

## சிம்புவிற்கு சான்றிதழ் கொடுத்தவர்

அண்மைக்காலத்தில் சிம்புவை பற்றி இவ்வளவு நல்லவிதமாக சொன்ன ஒரே நடிகையாக மஞ்சிமா மோகன்தான் இருப்பார் போலுள்ளது. கௌதம்மேனன் இயக்கத்தில் சிம்பு நடித்த அச்சம் என்பது மடைமையடாவில் நடித்த மலையாள மல்கோவா மஞ்சிமா. இந்தப்படத்தைதான் பெரியளவில் நம்பியுள்ள மஞ்சிமா வாயைதிறந்தாலே சிம்பு புராணமாம். படப்பிடிப்பில் விளையாட்டு பிள்ளையாக திரியும் சிம்பு, கமரா முன்னால் வந்துவிட்டால் மிகச்சீரியசாக நடித்து சிங்கிள் ரேக்கில் ஓகே வாங்கிவிடுவார். அவருடன் நடிக்கும்போது சொதப்பிவிடக்கூடாதென்பதற்காக முன்னரே ரிகர்சல் பார்த்துவிட்டு வருவேன். அவரோரு நல்லவர், வல்லவர்" என புகழ்ந்துள்ளார்.

## அதர்வாவின் தலைப்பு

சொந்தப்படம் தயாரிக்கும் ஆசை அதர்வாவிற்கும் வந்துவிட்டது. "ருக்குமணி வண்டி வருது" படத்தில் தற்போது நடிக்கிறார். அது முடிய "செம போத ஆகாத" என தலைப்பிட்டுள்ளார். சொந்தப்படம் என்பதால் விரும்பியபடி தலைப்பிட்டுள்ளார். இதில் அவருக்கு இரண்டு நாயகிகள். ஒருவர் பெங்காலி நடிகை மிஸ்டி. மற்றவர் நடிகை அனைகா. வித்தியாசமான கதையைத்தான் படமாக்கவுள்ளனராம். பார்க்கலாம், எப்படி படம் வருகிறதென.

## காங்ஸடர் அஜித்

அஜித்தின் 57வது படத்தை வீரம் சிவாதான் இயக்கப் போகிறார். விரைவில் படப்பிடிப்புக்கள் நடக்கவுள்ளன. காலில் செய்த அறுவை சிகிச்சையை தொடர்ந்து கடந்த பல மாதங்களாக ஓய்வில் இருந்ததால் அஜித்தின் உடம்பு நன்றாக ஏறியிருக்கிறது. அஜித் வீட்டிற்கு சென்ற சிவா, அவரைப்பார்த்து அதிர்ச்சியடைந்து விட்டாராம். காங்ஸ்டர் கெற்றப்பிற்கு உடம்பு மெலிந்திருக்க வேண்டுமென்று கூறிய சிவா, அஜித்தின் உடம்பை குறைக்கச் சொல்லியிருக்கிறார். இதையடுத்து காலை, மாலையென இரண்டு நேரம் ஜிம் போய் உடலை இளைக்க வைக்கிறாராம்.




# வேண்டாத சொல்லாகிறதா “புதிய சொல்”?

வளையாபதி

பொதுவாகவே இலக்கியத்தில் ஆர்வம் குறைந்துவிட்டது. வாசிப்பவர்கள் குறைந்து விட்டார்கள் எனக் கருத்தரங்குகளிலும் முகநூலிலும் இலக்கிய ஆர்வலர்கள் கவலைப்படுகிற இந்நேரத்தில் புதிய சஞ்சிகைகளின் வரவு என்பது வரவேற்கப்படவேண்டிய விடயமே. ஆனாலும் பிள்ளையார் பிடிக்கபோனால் குரங்காகி விடுமோ எனவும் எண்ணவைத்திருக்கிறது அண்மையில் வெளியான “புதியசொல்” சஞ்சிகையின் இரண்டாவது இதழில் இடம்பெற்ற இராகவனின் சிறுகதை ஒன்று. இது பலரது கண்டனதிற்குள்ளாகியிருக்கிறது. இலக்கிய இதழ்கள் வெளிவர வேண்டுமென்றுள்ள சூழலில், வெளிவர ஆரம்பித்த ”புதியசொல்” வேண்டாத சொல் ஆகிவிட்டதோ என எண்ணவைக்கிறது இந்தச் சிறுகதை. பாலியல் விடயங்களை எழுதுதல் ஒன்றும் தவறான விடயம் அல்ல. சமூக யதார்த்தத்தோடு பொருந்துகிற சம்பவ விரிப்புக்கள் எழுதப்படவேண்டியதே. தமிழிலக்கியம் எங்கும் இதற்கு நிறைந்த உதாரணங்கள் உள்ளன. ஆனால் பாலியலை எழுதும் போது இலக்கியம், பலான கதை என இரண்டுவகைகள் உள்ளன. ஜானகிராமன், நாகராஜன் எழுதாத இலக்கியத்தின் பாலியல் பக்கமா? ஆனால் “பதினாறுவயது பருவக் குமாரி” மாதிரியான தலைப்புக்களில் புத்தகமாக வெளியாகும் கதைகள் எல்லாமும் இலக்கியமுமல்ல என்ற தெளிவான புரிதல் அவசியம்.

சில மனப்பிறவாளர்கள் தமது பாலியல் உணர்ச்சிக்கு வடிகாலாக இத்தகைய பத்திகளை எழுதி தங்கள் நெருங்கிய நண்பர்களுக்கு காட்டுவார்கள். இங்கு இது பொது வெளியிலே பகிரப்படுவதை சமூக அக்கறை கொண்ட யாரும் எற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஒரு இலக்கிய சஞ்சிகை சமூகத்திற்கு பயனுள்ள விடயங்களை தர வேண்டும். அல்லது ஜனரஞ்சக ரசனைக்குரியதாகவாவது இருக்கவேண்டும். இதைவிடுத்து பாலியல் உணர் வுகளை தூண்டி சமூக சீரழிவிற்கு துணையானால் அதன் வரவை சந்தேகிக்கத்தான் வேண்டும். மேலும் புதிதாக இலக்கியபரப்பிற்குள் வருகின்ற புதிய வாசகர் ஒருவரை புதியசொல்லை படியுங்கள் என்று எப்படி அறிமுகப்படுத்தவது?

புதியசொல்லின் முதலாவதுஇதழிலும் இப்படியொரு பாலியல் வக்கிர கதை வெளியாகியிருந்தது. இது தெரியாமல் இலக்கியம் படிக்கும் ஆசிரியர் ஒருவர் பாடசாலை மாணவியொருவரிடம் புத்தகத்தை படிக்க கொடுத்துள்ளார். மாலையில்த்தான் இன்னொரு நண்பர் சொல்லி அதில் பாலியல்வக்கிர கதை இருப்பதை தெரிந்து, இரவே மாணவியின் வீட்டுக்கு சென்று, விடயத்தை சொல்ல முடியாமல் திண்டாடி ஒருவழியாக புத்தகத்தை வாங்கிக் கொண்டு தப்பினேன் பிழைத்தேன் என ஓடிவந்துவிட்டார். மாணவி புத்தகத்தை இன்னும் படிக்கவில்லையென சொன்ன பின்னர்தான் தனக்கு நிம்மதியென சொன்னாராம். மாணவி இந்தகதையை படித்து, இதை பெரியவர்கள் யாராவது பார்த்திருந்தால் தன் பற்றிய பிழையான அபிப்பிராயம் ஏற்படுத்தப்பட்டிருக்கலாமென்ற அச்சம் அந்த ஆசிரியரிடம் இருந்தது.

திருகோணமலையில் இருக்கிற இலக்கியச் செயற்பாட்டாளர் ஒருவர் “இதை வாசிக்கிறதிற்கு எங்களுக்குரிமை இருக்கிறது போல இதை வீதியில் போட்டு கொழுத்தவும் உரிமை இருக்கிறது” என்றார்.

புதியசொல்லின் இரண்டு இதழ்களிலும் பாலியல் வக்கிரகதைகளை எழுதியிருப்பவர் இராகவன். முன்னர் ஒருகாலத்தில் சில சிறுகதைகள் எழுதிய இராகவன், அண்மைக் காலமாக எழுதுபவற்றில் “கதைதன்மை” முற்றாக இல்லாமல் போய்விட்டது. பாலியல் வக்கிரங்களை எழுதி கவனத்தை கோரும் முயற்சியில் ஈடுபடுகிறாரோ என்ற ஐயம் எழுகிறது. இலக்கியஉலகில் முதற்காலடிகளை எடுத்து வைக்கும் சில இளைஞர்கள் “புதிய சொல்“லின் பின்னணியில் இருப்பதால், இப்படியான பாலியல்வக்கிர கதைகளில் ஈர்ப்பிருந்திருக்கலாம். ஆனால் பொதுவெளியில் இயங்கத் தொடங்குபவர்கள் இப்படியான விடயத்தில் மிகுந்த அக்கறையாக செயற்பட வேண்டும். பாடசாலையில் பாலியல்கல்வி அவசியம், இப்படியான கதைகளை இன்னும் எவ்வளவுகாலம் மறைவாக வைத்திருக்கப் போகிறீர்கள் என புதியசொல்லிற்கு ஆதரவாக ஒருவர் பேஸ்புக்கில் மேம்போக்காக எழுதியிருந்தார். பாலியல்கல்வியென்பது பாடசாலையில் நீலப்படத்தை போட்டு காண்பிப்பதல்ல என்பது பேஸ்புக்கில் உள்ள “கருத்து கந்தசாமி” களிற்கு புரியாமலிருப்பதில் ஆச்சரியமில்லை.

“புதிய சொல்” இத்தகைய தவறுகள் களைந்து தன்னை திருத்தி புதுமையாய் மேலெழ வேண்டும். இதை விடுத்து நவீனம் பின்நவீனம் கட்டுடைத்தல் போன்ற வார்த்தை ஜாலங்களால் இதனை கடந்துவிட முடியாது. இலக்கியத்திற்குள் புதிதாக நுழைபவர்களிடம் ஆரம்பத்தில் இருக்கும் இந்த விறுவிறுப்பு, கிறுகிறுப்பில் இப்படியே இதழை நடத்தினால் பாடப்புத்தகத்திற்குள் மறைத்துவைத்து மாணவர்கள் படிக்கும் இதழ்களின் வரிசையில்த்தான் இதுவும் சேரும் அபாயமுள்ளது.

---



# காலையிலே சிகரெட்டா?

போதைக்கு அடிமையான உலகம் இது. இளைஞர்களின் மோகம் இன்று சிகரெட் தான். சிகரெட் புகைப்பது ஸ்ரைல் என்று ஆரம்பிக்கும் எமது இளைஞர்கள் நிக்கோட்டினின் நிற்பாட்ட முடியாத போதை பழக்கத்தால் தொடர்ந்தும் அடிமையாகி விடுகின்றார்கள். ஒரு நாளுக்கு ஒன்றா இரண்டா? அடிக்கடி புகைக்கும் பழக்கமுடைய இளைஞர்கள் புகைத்தலிற்கு அடிமையாகி உயிரையும் விடும் நிலைக்கு செல்கிறார்கள்.

இப்படி இருக்கையில் சில இளைஞர்கள் காலையிலே எழுந்து ரீ குடிக்கும் முன்னரே சிகரெட் புகைக்க ஆரம்பிக்கின்றனர். சாப்பிடுவதற்கு பணம் இல்லாவிட்டாலும் சிகரெட் புகைப்பதற்கு பணம் இல்லையென்றதும் பைத்தியம் பிடித்தவர்கள் போல் கோபம் கொதிக்க திரியும் ஆண்களை பார்க்கும் பொழுது பரிதாபமாக இருக்கும்.

பலம் மிக்க மனிதனை அடிமையாக்கி விடும் நிக்கோட்டின் ஏற்படுத்தும் விளைவுகள் சாதாரணமானதல்ல. ஒரு மனிதனை பைத்தியமாக்கும். உயிரை பறிக்கும். கடன்காரனாக்கும். இப்படி மனிதனின் அழிவில் முதலிடம் வகிக்கின்றது சிகரெட். எனவே சிகரெட் குடிப்பதை பழக்கபடுத்துவதையே வளர்ந்து வரும் சமூகம் தவிர்க்க வேண்டும்.

ஏற்கனவே பழக்கப்பட்டுள்ளவர்கள் குறைந்தது காலையில் சிகரெட் புகைக்கும் பழக்கத்தையாவது தவிர்த்துவிட வேண்டும். அதையும் மீறி காலையில் புகைத்தால் என்ன நடக்கும்? காலையில் எழுந்தவுடன் புகை பிடிப்பது என்பது மரணத்தை விரைவில் வரவழைக்கும் என்று எச்சரிக்கிறார்கள் மருத்துவ ஆய்வாளர்கள்.

இது தொடர்பாக அமெரிக்க மருத்துவக் கல்லூரி ஒன்று நடத்திய ஆராய்ச்சியில், காலையில் எழுந்ததும் புகை பிடிப்பதினால் நுரையீரல், கழுத்து மற்றும் தலையில் புற்று நோய் வருவதற்கான ஆபத்து மிக அதிகமாக உள்ளதாக தெரியவந்துள்ளது.

புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவர்களில் பலர், காலையில் எழுந்ததுமே கழிவறைக்குள் புகுந்துகொள்வார்கள். உள்ளே போய் ஒரு சிகரெட்டை பற்ற வைத்தால்தான் அவர்களுக்கு காலைக்கடனே கழியும். சிலர் இதனை பெருமையாக வேறு கூறிக்கொள்வார்கள்.

அத்தகைய பீற்றல்காரர்களுக்குத்தான் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர் மேற்கூறிய மருத்துவக்கல்லூரி ஆராய்ச்சியாளர்கள்.

இவ்வாறு காலையில் எழுந்ததும் புகைபிடிப்பவர்களது உடலில் நிகோடின் மற்றும் இதர புகையிலை நச்சுகள், மற்ற நேரங்களில் புகை பிடிப்பவர்களை விட அதிகமாக காணப்படுகின்றன. அத்துடன் புகை பிடிக்கும் மற்றவர்களை விட இவர்கள் புகை பிடிக்கும் பழக்கத்திற்கு மிக அதிகமாக அடிமையாக உள்ளதாகவும் அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

நுரையீரல் புற்றுநோய் பாதித்த 4,775 பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வில், அவர்கள் அனைவருமே காலையில் எழுந்ததும் சிகரெட் புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவர்களென்பது தெரியவந்துள்ளது.

இதேபோன்றுதான் தலை மற்றும் கழுத்தில் புற்றுநோய் தாக்கியவர்களுக்கும், மற்ற நேரங்களில் அதாவது காலையில் எழுந்து ஓரிரு மணி நேரம் கழித்து புகை பிடிப்பவர்களைக் காட்டிலும் அதிக நோய் தாக்கம் இருப்பது தெரியவந்துள்ளது.

மொத்தத்தில்,சிகரெட் பிடிப்பதே உடல் நலத்திற்கு கேடு என்று இருக்கும்போது, காலையில் எழுந்தவுடன் மட்டுமல்லாது நிரந்தரமாகவே புகைபிடிப்பதை கைவிட்டு விடலாமே!




# குழந்தைப் போராளி

சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா

அம்மா கதவடியில் வந்து பார்த்தார். பார்வை என்னமோ சாதாரணமாகத் தானிருந்தது. 'உனது பெரிய வயிறு ஒருநாளில்லை ஒருநாள் உன்னை கடுமையான சிக்கலில் கொண்டு போய் விடப்போகிறது' எனச் சொல்லிக் கொண்டே சிந்திப்போன பாலிற்காக எதுவுமே சொல்லாது வீட்டினுள் சென்றார். காலில் கொப்புளம் வந்து தோல் உரிந்து விடாதிருக்க மரத்திலிருந்து இரு இலைகளைப் பறித்து எனது காலில் வைத்து எனது சட்டையில் கிழித்தெடுத்த துணியினால் கட்டிக் கொண்டேன். அழுதுகொண்டே இதைச் செய்து முடித்த நான் என்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு மரத்தின் கீழ் ஆடு மாடுகளுடன் அமர்ந்துகொண்டேன்.

எனது காயமும் வேதனையும் அம்மாவை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. வேலை செய்வதற்குத் தகுதியானவளாகவே அவர் என்னைப் பார்த்தார். மூன்று நாட்களின் பின்பு அம்மா என்னை மேய்ச்சல் நிலத்தின் தொங்கலுக்குச் சென்று மாட்டுக்கன்றுகளைப் பார்த்து வரும்படி சொன்னார். மாட்டுக் கன்றுகளைத் தேடிப் புறப்பட்ட நான், எனது காலில் கட்டியிருந்த துணிக்கட்டின் மேல் வெள்ளை வெள்ளையாக ஏதோ தொங்குவதைப் பார்தேன். முதலில் துணியின் நூல்கள் தான் தொங்குவதாக நினத்த நான் அவற்றைத் தொடும் போது அவை புழுக்கள் என்பதைக் கண்டு கொண்டேன். பெரிதாக அலறிக்கொண்டே வீட்டை நோக்கிஓடினேன். எனது கால் அழுகிப் போய்விட்டதென்பதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இருக்கவில்லை. அம்மா புண்ணிலிருந்து புழுக்களை அகற்ற உதவினார். புண் மீது பஞ்சு வைத்துக் கட்டி விட்டார். ஆனாலும் எனது பயம் என்னை விட்டுப் போகவே இல்லை. காலை இழந்து விடுவேனென்ற பயத்தில் அடிக்கடி என் காலைப் பார்த்துக்கொண்டே இருப்பேன். நல்ல வேளையாகக் கால் சீக்கிரமாகவே குணமாகியது, எனது மனப்பாரமும் என்னைவிட்டு நீங்கியது.

என்னைத் தண்டிப்பதற்காகவே அம்மா ஆடுகளை மேய்க்கும்படி கட்டளையிடும் போது அவளென்னை எவ்வளவு மகிழ்விக் கின்றாள் என்பதை அவள் அறியவேயில்லை. காலைதொடங்கி மாலைவரை என் பிரியமான ஆடுகளைப் மேய்ப்பது, அப்போது அடிகள், உதைகள், ஏச்சுக்களிலிருந்து விடுதலை எல்லாமே எனக்கான மோட்சத்தின் பரிசாகவே நினைத்துக் கொள்வேன். ஆடுகள் என் சொற்படி கேட்பதுடன் எனக்குப் பெரிதாக எந்தப் பிரச்சனையும் தருவதில்லை. ஆயினும் முகத்தைச் சுருக்கிக்கொண்டு ஆடுகளைப் மேய்ப்பது ஒரு பெரிய தண்டனை போலவே நடிப்பேன். மனதிலோ மகிழ்ச்சி கரைபுரண்டோடும். ஆனாலும் சில வேளைகளில் தனிமை என்னை வாட்டும். ஆடுகளால் கதைக்க முடியாதல்லவா! அத்துடன் மற்றக் குழந்தைகள் போலவே எனக்கும் கலகலப்பாக இருக்கவேண்டுமென்ற உள்ளார்ந்த ஆசை இருக்கத்தான் செய்தது.

ஒருநாள் காலை, அம்மா காலை உணவாகப் பாலைக் கொடுத்து, விரைவாகப் பாலைக் குடித்துவிட்டு ஆடுகளை மேய்ச்சலுக்கு இட்டுச் செல்லும்படி சொன்னார். பின்பு அவர் வெளியே போய்விட்டார். அவரது காலடிச் சத்தம் மறைந்த உடனே நான் ஓர் துண்டுஇறைச்சியைஎன் வாயினுள் திணித்துக் கொண்டேன். தொண்டையில் சிக்கிக் கொண்ட இறைச்சியை ஒரு கோப்பைத் தண்ணீரின் உதவியுடன் விழுங்கியபடி எனது மூச்சைச் சரிப்படுத்த ஒரு நிமிடம் உட்கார வேண்டியிருந்தது. ஆடுகளும் நானும் பச்சைப்பசேலெனப் புற்கள் அடர்ந்து வளர்ந்திருந்த ஓரிடத்திற்கு வந்து சேர்ந்தோம். ஆடுகளை அங்கேயே மேயவிட்டு நான் காளான் சேகரிக்கச் சென்றேன்.காளான்கள் அவ்வளவாகக் கண்ணில் படவில்லை. திடீரென ஆட்டுக் குட்டியொன்று கத்தும் சத்தத்தை நான் அவதானித்தேன். அப்போது நான்கு குட்டிகள் ஒரு புதருக்குள்ளிருந்து வெளியே வந்தன. கண்ணில் கண்ணீருடன் கவனித்தேன். அவைகளும் என்னைப் போலவே மறிக்குட்டிகள்.மந்தையுடன் அவை களைச் சேர்த்துச் சாய்துக்கொண்டு போகும் போது எனக்கு மிகவும் மகிழ்வாயிருந்தது. இவைகள் எனது ஆட்டுக்குட்டிகள். நான் தான் இவைகளைக் கண்டு பிடித்தேன். இப்போதுதான் எனக்கு மட்டுமே சொந்தமெனச் சொல்லிக்கொள்ள ஏதோ கிடத்துள்ளது. எனது ஆட்டுக்குட்டிகள்!

மாலையில் மற்றவர்களுக்கும் இது பற்றிச் சொல்ல ஆவலுடன் காத்திருந்தேன். அவர்களும் உண்மையாகவே மகிழ்வார்கள், என்னைப் பெருமைப்படுத்துவார்கள். ஆனால் ஒருமுறை கூட அவர்கள் சிரிக்க வேயில்லை. அம்மா தான் நாளக் காலையில் புதிய ஆட்டுக்குட்டிகளை ஒருமுறை பார்க்க வேண்டுமெனச் சொன்னார். வேறொரு வரும் ஒன்றும் சொல்லாதபடியால் ஆட்டுக் குட்டிகள் எனக்குச் சொந்தமா? அல்லது முழுக் குடும்பத்திற்குமா? எனக் கணக்குப் பார்க்கத் தொடங்கினேன். சிலவாரங்கள் கழித்து அப்பா வீட்டிற்கு வந்தார் அவரை வரவேற்கக் கூட எனக்கு நேரமிருக்கவில்லை. அவரின் கையைப்பற்றி ஆட்டுக்குட்டிகளிடம் அவரை அழைத்துச் சென்றேன்.

---



வடக்கு கிழக்கின் கல்வி நிலையில் வீழ்ச்சி:

# பரீட்சைப் பெறுபேறுகள் வெளிப்படுத்தும் உண்மை!

விஜே

இலங்கையில் நடைபெறும் பொதுப் பரீட்சைகளில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையே பாடசாலை களின் கல்வித்தரத்தினை வெளிக்காட்டுவது என்று கருதப்படும் நிலையில் அப் பரீட்சை யில் வடகிழக்கு மாவட்டங்கள் பின்தள்ளப் பட்டுள்ள நிலையானது இம்மாவட்டங் களின் கல்வி நிலை தொடர்பான கேள்வியைத் தோற்றுவித்திருக்கிறது.

வெளியிடப்பட்டுள்ள பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பிரிவில் கற்பதற்குத் தகுதி பெற்றோர் வரிசையில் மன்னார் மாவட்டம் 10 ஆவது இடத்திலும், அம்பாறை மாவட்டம் 13 ஆவது இடத்திலும், வவுனியா மாவட்டம் 16 ஆவது இடத்திலும், மட்டக்களப்பு மாவட்டம் 17 ஆம் இடத்திலும், யாழ்ப்பாண மாவட்டம் 21 ஆவது இடத்திலும் திருகோணமலை மாவட்டம் 23 ஆவது ஆவது இடத்தி லும், முல்லைத்தீவு மாவட்டம் 24 ஆம் ஆவது இடத்திலும், கிளிநொச்சி மாவட்டம் 25 ஆவது ஆவது இடத்திலும் காணப்படுகின்றன.

இவ்வரிசை நிலைப்படுத்தலில் 2013 ஆம் ஆண்டு 8 ஆவது இடத்திலிருந்த யாழ்ப்பாண மாவட்டம் 2014 ஆண்டு 20 ஆவதுஇடத்திற்கும் 2015 ஆம் ஆண்டு 21 ஆவது இடத்திற்கும் பின்தள்ளப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு 2 ஆம் நிலையிலிருந்த மன்னார் மாவட்டம் இம்முறை 10 ஆம் இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு 7 ஆம் நிலையிலிருந்த வவுனியா மாவட்டம் இம்முறை 16 ஆம் இடத்திற்குப் பின்தள்ள ப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு 15 ஆம் நிலையிலிருந்த மட்டக்களப்பு மாவட்டம் இம்முறை 17 ஆம் இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு 21 ஆம் நிலையிலிருந்த திருகோணமலை மாவட்டம் இம்முறை 23 ஆம் இடத்திற்குப்பின்தள்ளப்பட்டுள்ளது.

தொடர்ந்து பல வருடங்களாக முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட் டங்கள் இறுதி நிலையிலேயே காணப்பட்டு வருகிறன.

பரீட்சைத்திணைக்களம் வெளியிட்டள்ள தகவல்களின் படி நாடாளவிய ரீதியல் பரீட்சைக்குத் தோற்றிய 273,224 பேரில் 189,428 பேர் உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளதாகவும் இது பரீட்சைக்குத் தோற்றியோரின் மொத்த எண்ணிக்கையில் 69.33 வீதமெனவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதேவேளை வட மாகாணத்தில்பரீட்சைக்குத் தோற்றிய 17,752 பேரில் 10,719 பேரும் , கிழக்கு மாகாணத்தில் பரீட்சைக்குத் தோற்றிய 21,693 பேரில் 13,784பேரும் உயர்தர வகுப்புக்குச் செல்லத் தகுதி பெற்றுள்ளனர்.

அத்தோடு பாடசாலைகள் மட்டத் தில் சித்தி வீதத்தில் முதல் 61 பாடசாலை களில் கொழும்பு தேவி பாலிகா கல்லூரிமுதலிடத்தைப் பெற்றுக்கொண் டுள்ளதுடன் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி 25ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

யுத்த காலங்களிலும் அதற்கு முன்னரும் கல்வித்தரம் உயர்ந்து காணப்பட்ட வடகிழக்கு மாவட்டங்களின் கல்வித் தரம்தற்போது வீழ்ச்சியடைந்திருப்பது பலரையும் கவலை கொள்ளச் செய்திருக்கிறது.

மேலும் இப்பின்னடைவுக்குப் பல காரணங்கள் இருந்த போதிலும் முறையற்ற ஆசிரிய நியமனங்கள், முறையற்ற அதிகாரி களின் இடமாற்றம், கல்வியில் அரசியல் தலையீடுகள், கல்வியில் அனாவசியமான வெளியாரின்தலையீடுகள் இவ்வீழ்ச்சிக்கு காரணம் எனவும் கருத்து வெளியிட்டுள் ளார்கள்.

மேலும், வடக்கு கிழக்கு மாகாணங்கள் கல்வியில் திட்டமிடப்பட்டு அழிக்கப்படு கின்றமை மற்றும் வெளிப்படுத்தமுடியாத அபாயகரமான நிலைமைகள் உள்ளன எனவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ளபத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# துர்முகி வருஷம் சித்திரைப்புத்தாண்டு இராசிகளுக்குரிய பலாபலன்கள்




சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392




### மேடராசி

**சாதகமானவை:** சொத்துக்கள் சேர்தல், செய்கருமங்கள் சித்தியாதல், வாழ்வாதாரம் நல்ல நிலை, மனச்சந்தோசம், இல்லத்தில் மங்களகரம் இருத்தல், தொழிலில் புதிய நிலை பெறுதல், ஆடை ஆபரணசுகம் கிட்டுதல், அதிக முயற்சி ஊக்கம் உழைப்பு அமைதல், காணி, பூமி தொடர்பில் சாதகமான நிலை எட்டப்படுதல், பணவருவாய் அமைதல், நல்ல தயவு சுகம் கிடைத்தல், விவாகம் தொடர்பான முயற்சிகள் கைகூடுதல், கல்விச் சிறப்புக்களுக்கு கடுமையான கரிசனை காட்டும் நிலை உண்டாதல் போன்றவை அமையப்பெறும்.

**பாதகமானவை:** தேகசுகம் பாதித்தல், சிநேகிதங்களால் சில தொல்லை இருத்தல், கணவன், மனைவி உறவு இடையிடையே பாதிக்கப்படுதல், பொருள் விரயமாதல், சில அவமானங்களைச் சந்தித்தல், பிரயாணங்களால் அலைச்சல், கஸ்டம் உண்டாதல், மறைமுக எதிரி பகையாளி இடையூறுகள் இடையிடையே இருத்தல், இனசனப் பகை மனதில்ஒருவிதபயமான உணர்வுதோன்றுதல், கருமங்களின் இடையிடையே தாமதமான தடையான உணர்வுகள் தென்படுதல், வேலைப்பழு அதிகம் உண்டாதல், பணவிரயங்களும் இடையிடையே காணப்படும் நிலையும் காட்டும்.

**முக்கிய கவனிப்பு**

அட்டமத்து சனி, வியாழமாற்றம் 6 ஆம் நிலைக்கு வருதல், ராகு, கேது 5ஆம், 11ஆம் நிலையில் இருத்தல். கஸ்டம், நஷ்டம், துன்பம், துயரம் என்பவற்றை இடையிடையே காட்டி வரும். சனீஸ்வரர், ஆஞ்ஞநேயர், தெட்சணாமூர்த்தி, அம்மன், விநாயகர், முருகன் வழிபாடுகளை இடையிடையே நிறைவாக்குவது நற்பலனுக்கு உதவியாயமையும்.




### இடபம்

**சாதகமானவை:** நாளாந்த சீவியம் நிறைவாதல், பொருள்வரவு உண்டாதல், தனதானிய லாபமிருத்தல், புண்ணிய கரும மிருத்தல், செய்கருமங்கள், புதிய முயற்சிகள் தாமத நிலைகண்டு பயனளித்தல், ஒரு சிலருக்கு தொழில் நிலையில் புதிய அந்தஸ்து கிட்டுதல், குடும்பசுகம் அனுபவித்தல், சிநேகிதர்கள் ஆதரவு உதவி காணப்படுதல், கடல் கடந்த பயணங்கள் அமைதல், சுபமங்கள வைபவங்களில் பங்கேற்றுக் கொள்ளல், பெண்கள் சுகம் கிட்டுதல், வாகனம் சார்ந்த முயற்சிகள் கைகூடுதல், நற்கரும நிகழ்ச்சிகள் சாதக நிலை தருதல்; பிள்ளைகளால் மனதில் சந்தோச நிலை பெறுதல், ஆடை ஆபரணம் சேர்தல், பெரிய மனிதர்கள் நட்பு கிடைத்தல், மனதில் எண்ணிய கருமம் கைகூடுதல், மனைச் சிறப்பு இருத்தல், ஆண்டிறுதியில் நல்ல போசன சுகம், நித்திரை சுகம், கௌரவம், சிலருக்கு நல்ல இடமாற்றம், வருமான அதிகரிப்பு, திருமணபந்தத்தில் எதிர்பார்ப்பவர்கள் கிடைக்கப் பெறுதல், கல்விச் சிறப்புக்களும் அமையும்.

**பாதகமானவை:** பணியாட்களால் கஸ்டநிலை, இனசன நிநேகிதம் இவர்களால் கவலை, பொருள் விரயம் உண்டாதல், தேகசுகம் குறைவாய் அமைதல், சிறு சிறு சச்சரவு பிணக்கு நிலை தோன்றி மறைதல், அலைச்சல் நிலை அமைதல், செய்யும் முயற்சிகளுக்கு நல்ல பலன் கிட்டாமை. குடும்பத்தில் பலருக்கு உடல்நலக்குறைவு அமைதல், திருடர் தொல்லைக்குள் சிக்குதல், ஆயுதங்கள் பாவனையால் துன்ப, துயரங்கள் காணப்படுதல், கொடுக்கல் வாங்கல் பிணக்கு இருத்தல், சிலர் வீண் பழிகேட்கும் நிலை, எதிரி, பகையாளி தொல்லை, இடைசுகம் தோன்றி மறைதல் என்பவை காணப்படும்.

**முக்கிய கவனிப்பு:** சனி மாற்றம் 7 ஆம் நிலை, வியாழ மாற்றம் 5 ஆம் நிலை, ராகு கேது 4 ஆம், 10 ஆம் நிலை நற்பலன்களுடன் தேகசுகப் பாதிப்பு, கௌரவக் குறைவு, பணவிரயம் என்பவற்றை மாறி மாறிக் காட்டும். சனீஸ்வரர், ஆஞ்ஞநேயர், துர்க்கை, தட்சனாமூர்த்தி, விநாயகர், வழிபாடுகள் இடையிடையே நிறைவாக்கி கஸ்டம், துன்பத்திலிருந்து விடுபட முயற்சிக்க வேண்டும்.



### மிதுனம்

**சாதகமானவை:** கால் நடை விருத்தி, கணவன், மனைவி உறவு வலுவாய் அமைதல், பணவருவாய் இருத்தல், மனதில் சந்தோசம் உண்டாதல், குழந்தை சுகம் இருத்தல், நல்ல சுகமான வாழ்வு நிலை, ஆடைஆபரண சுகம் உண்டாதல், வீட்டில் பல சிறப்புக்களும் காணப்படுதல், செய்தொழில் மேன்மை, சினேகிதர்களால் நன்மை பெறுதல், பதவி நிலைகளில் புதிய அந்தஸ்து இருத்தல், பெரியோர்கள் மதிப்பு உண்டாதல், எதிரி பகையாளியை வெற்றி கொள்ளல், பணியாட்களால் நல்ல பலன் அமைதல், கௌரவம், மரியாதை, மதிப்பு, புகழ் உயர்நிலை பெறுதல், தானம், தருமம், கருமங்கள் அமைதல், இலட்சுமிகரமான நிலைகள் தோன்றி மறைதல், வருட இறுதியில் நல்ல வெற்றிகள், பல பொருள் வருவாய் அமைதல், மனதில் எண்ணியவை கைகூடுதல் போன்றவை உண்டாகும்.

**பாதகமானவை:** பிரயாணங்களில் கஸ்டம் அனுபவித்தல், வகிக்கும் நிலைகளில் சில மாற்றம், நல்லொழுக்கம் பாதிக்கப்படுதல், ஆயுதங்களால் பாதிப்பு, தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படுதல், சிலரிடம் ஏமாறும் நிலை, குடும்பசுகம், இடையில் சச்சரவு நிலை தோன்றுதல், பிள்ளைகளால் கவலை தோன்றுதல், பெண்கள் மூலம் சில துன்பம், துயரம் சந்தித்தல், வீண்பழிகேட்டல், பணவிரயம், மனம் விரும்பிய செயல் தடைப்படுதல், மனப்பயம் கொள்ளுதல், கொடுக்கல் வாங்கல் நிலைகளில் எச்சரிக்கை அவசியமாதல், மற்றும் அலைச்சல் தரும்.

**முக்கிய கவனிப்பு:** சனிமாற்றம் நிலை 6 ஆம் நிலை, வியாழமாற்றம் 4ஆம்நிலை, ராகு கேது 3ஆம், 9ஆம், நிலையில் இருத்தல், பொருள் வரவு, தனவரவு மத்திம நிலை பெறுதல், விவேகமாக செயற்படும் நிலை அவசியமாதல், விவேக முயற்சிகள் தாமதப்படும் நிலை பெறுதல், கல்வி முயற்சியாளர்கள் கடுமையாக உழைக்கும் நிலையும் தோற்றுவிக்கும். சனீஸ்வரர், ஆஞ்ஞநேயர், பத்திரகாளி, விநாயகர், தெட்சணாமூர்த்தி வழிபாடுகள் சுகம் செய்யும்.



### கடகம்

**சாதகமானவை:** தொடங்கும் கருமங்கள் வெற்றியாய் முடிதல், கால்நடை விருத்தியாதல், கணவன், மனைவி உறவு நன்றாயமைதல், பணவருவாய் நல்ல நிலை, பெரியோர் சகாயம் கிடைத்தல், கௌரவம், புகழ் நல்ல நிலை பெறுதல், மனச்சந்தோசம், புதிய பதவிநிலை, அந்தஸ்து தகுதிநிலை சிலருக்கு ஏற்படுதல், போசனசுகம் கிட்டுதல், இனசனம் சேர்ந்து கொண்டாட்ட நிகழ்வுகள் அமைதல், தானம், தருமம் கருமங்களில் ஈடுபடுதல், ஆடைஅணிகல சுகம் இருந்து வருதல், செய்யும் தொழில் மூலம் நல்ல வருவாய் இருக்கவும், பலன்களை அனுபவிக்க முடியும்.

**பாதகமானவை:** கருமங்களில் கோபம் மிகுந்து காணப்படுதல், தேகசுகம் நலிவு பெறுதல், பணியாட்களால் கஷ்டநிலை உருவாதல், மதிப்பு குறைதல், பணகஸ்டம், வாய்தர்க்க நிலை உண்டாதல், செய்கருமங்களில் தடை நிலை காணுதல், விஷம், ஆயுதம் என்பவற்றால் துன்பம், துயரம், நோய் பிணி காட்டுதல், கஷ்டம், இடர், இடைஞ்சல் அனுபவித்தல், எதிரி பகையாளி தொல்லை இருந்து வருதல், மனதில் எண்ணியவை தடைப்படல், கணவன், மனைவி பிள்ளைகள் உறவுகள் தொடர்புகள் பாதிப்படைதல், பகை நிலை பெறுதல், இனசன வெறுப்பு, பெண்கள் மூலம் துயரம் அனுபவித்தல், பிரயாணங்களில் கஸ்டம், இடையில் அதிக செலவு இருத்தல், மனச்சஞ்சலம், நிம்மதிக்குறைவு, விற்பனை வீழ்ச்சி, விவாகம் சார்ந்த முயற்சிகளில் இழுபறி நிலை தொடர்தல், கல்வி முயற்சியில் உள்ளோர் கடும் பிரயத்தனம் செய்தால் மட்டும் சித்திகள் கிடைக்கவும் பலன் உண்டு.

**முக்கியகுறிப்பு.**

சனி மாற்றம் 5 ஆம் நிலை, வியாழ மாற்றம் 3ஆம் நிலைக்கு வருதல், ராகு, கேது 2ஆம், 8ஆம் நிலைகளில் அமைந்துள்ளதும் நல்ல பலன்களை வெகுவாய்ப் பாதிக்கும். சனீஸ்வரர், ஆஞ்ஞநேயர், தெட்சனாமூர்த்தி, பத்திரகாளி, விநாயகர் வழிபாடுகள் இடையிடையே தவறாது செய்து சுகம் அனுபவிக்க வேண்டும்.

ஏனைய இராசிகளுடைய பலாபலன்களை தொடர்ந்துவரும் வார வெளியீடுகளில் பார்க்கலாம்.

24.04.2016 முதல் 30.04.2016 வரை சந்திராஷ்டம நிலை பின்வருமாறு அமையும்.

மேடராசி: 24,24,26 திகதிகள்.
இடபராசி: 26,27,28 திகதிகள்.
மிதுனராசி: 29,30 திகதிகள்.


**ஏனைய இராசிகளுக்கு இவ்வாரம் சந்திராஷ்டமம் இல்லை.**

இந்த சந்திராஷ்டம நாட்களில் நோய், பிணி, துன்பம், துயரம், கஸ்டம், நஷ்டம், அலைச்சல், இழப்பு என்பன நிகழலாம் என்பது சோதிட விதி ஆகும்.

### நம் பண்பாட்டுப் பெருமை

கங்கே யமுனே சைவ
கோதாவரி ஸரஸ்வதி
நர்மதே ஸிந்துகாவேரி
ஜலே அஸ்மின் ஸன்னிதிம் குரு.

“புனிதமான கங்கை யமுனை கேதாவரி சரஸ்வதி நர்மதை சிந்து காவேரி நதிகள் நான் குறிப்பிடும் இந்த நீரிலே எழுந்தருளுவீர்களாக” என்று தினமும் பிராத்திப்பது நமது சமயத்தின் பழம்பெரும் பண்பாடாகும். சைவசமயம் இதனைப் பகர்கிறது.



ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி
உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263



# தேங்காய்ப்பூ கேக்

**தேங்காய் தொதல் தயாரித்தல்.**

40 துண்டுகள் (2" ஒ 2")

**தேவையான பொருட்கள்:**

அரிசிமா - 2 சுண்டு (1 சுண்டு அரிசியில் இடித்தமா), சீனி - $1^{1/2}$ கிலோக்கிராம், சர்க்கரை - 1/2 கிராம், தேங்காய் - 04, சவ்வரிசி - 50 கிராம் அல்லது 2 மே.க (நிரப்பி), ஏலப்பொடி - 1 தே.க (நிரப்பி), தண்ணீர் - 9 தம்ளர், உப்புத்தூள் - 2 சிட்டிகை, வறுத்த பயறு - 50 கிராம், வறுத்த கச்சான் முத்து - 100 கிராம்

**செய்முறை:**

- ஒரு சுண்டு அரிசியை மூன்று மணிநேரம் ஊறவைத்து, இடித்து அரித்து இரண்டு சுண்டு மாவை எடுத்துக் கொள்க.
- தேங்காயைத் துருவி, பெரிய பாத்திரத்திலிட்டு 9 டம்ளர் தண்ணீரில் அளவளவாகத் தண்ணீர் விட்டுப் பிழிந்து 4 டம்ளர் முதல் பாலும், 6 டம்ளர் இரண்டாம், மூன்றாம்பாலும்எடுத்துவைத்துக்கொள்க.
- பின்பு 5 டம்ளர் இரண்டாம், மூன்றாம் பாலில் சர்க்கரை, சீனி, அரிசிமா, உப்புத்தூள் என்பவற்றைப் போட்டு சர்க்கரை நன்கு கரையும் வரை கரைத்துக் கொள்க. (சர்க்கரையைச் சீவிப் பாலில் கரைத்து வடிகட்டியபின், மாவையும் சீனியையும் போட்டுக் கரைத்தல் சிறந்ததாகும்)
- பின்பு, இக் கலவையை அடுப்பில் வைத்து, இடைவிடாது காய்ச்சிக் கொண்டிருக்கவும், காய்ச்சும் போது கலவை ஓரளவு தடித்து சட்டியில் ஒட்டும் பதத்தை அடையத் தொடங்கியதும் முதற்பாலை விட்டு கரண்டியால் அடிப்பிடிக்காவண்ணம் இடைவிடாது கிளறிக் கலவை முழுவதுமாகத் திரளத் தொடங்கும் போது ஏலப்பொடி, சவ்வரிசி, பயறு, கச்சான், என்பவற்றைப் போட்டுச் சேர்த்து எண்ணெய் மிகுதியாகப் பெருகுமாயின் கரண்டியால் இயலுமான அளவை அள்ளியெடுத்த பின்பு தாச்சியை அடுப்பிலிருந்து இறக்கிக் கொள்க. பின்பு சதுரவடிவான தட்டினில், இக் கலவையைக் கொட்டி, தட்டையான அடிப்பாகமுள்ள பாத்திரத்தால் 2" தடிப்பாக இருக்கும் வண்ணம் அழுத்திப்பரவி 2"X2" அளவான துண்டுகளாக வெட்டிக் கொள்க.

**தேங்காய்ப்பூ கேக்.**

50 50 துண்டுகள் $1^{1/2}$" X $1^{1/2}$"

**தேவையான பொருட்கள்:**

கோதுமை மா 1/2 கி. கிராம், மாஜரீன் 1/2 கி. கிராம், சினி 1/2 கி. கிராம், முட்டை 10, தேங்காய் பாதி, வனிலா 2 மே.க, பேக்கிங் பவுடர் 2 மே.க (நிரப்பி), பிளம்ஸ் 100 கிராம்

வெட்டிய கஜீ - 50 கிராம்

**செய்முறை;**

- தேங்காயைத் துருவி வெயிலில் நன்றாகக் காய வைத்து எடுத்துக் கொள்க.
- மாவுடன் பேக்கிங்பவுடர் 5 முறை அரித்து வைத்துக் கொள்க.
- பாத்திரத்தில் மாஜரீனைப் போட்டுச் சீனியும் சேர்த்து சீனி கரையும் வரை நன்றாக அடித்துக் கொள்க.
- முட்டைகளை தனியாகப் பாத்திரத்தில் உடைத்து விட்டு வனிலாவும் சேர்த்து நுரை பொங்கும் வண்ணம் அடித்து, இந் நுரையை மட்டும் அடித்து வைத்துள்ள மாஜரீன் கலவையில் சிறிது சிறிதாக விட்டு முழுவதுமாகச் சேர்த்துக் கொண்ட பின்பு தேங்காய்ப் பூவையும் சேர்த்து அடித்தக் கொண்டு பின்பு மாவை சிறிது சிறிதாகத் தூவி முழுவதுமாகச் சேர்த்துக் கலந்து பிளம்ஸ் கஜீ என்பவற்றையும் கலந்து கொண்ட பின்னர் மாஜரீன் பூசிய தட்டிலூற்றி பரவி பேக் செய்து ஆறிய பின்னர் துண்டுகளாக வெட்டியெடுத்துப் பரிமாறலாம்.

**தேங்காய்ப்பால் ரொபி (coconut milk toffee) தயாரித்தல்.**

**தேவையான பொருட்கள்:**

தடித்த தேங்காய்ப் பால் 500 மி.லி, கச்சான் முத்து 100 கிராம் (சிறு துகள்களாக தூளாக்கப்பட்டது), சீனி 400 கிராம்.

**செய்முறை:**

ஒரு பாத்திரத்தில் குறிப்பிட்ட அளவு பால், கச்சான் துகள்கள், சீனி, ஜகரி, ஐஸ்சிங் ஆகியவற்றை இட்டு அடுப்பில் வைத்து சூடாக்கவும். சூடாகும் வரை



கிளறிக் கொண்டு இருக்கவும். குறித்த பதத்தில் தடிப்படைந்து வந்ததும், ஏலக்காய் பவுடரைச் சேர்த்துக் கிளறவும்.

பின்பு, அந்தப் பாத்திரத்தினை குளிர்ந்த தண்ணீர் உள்ள இன்னொரு பாத்திரத்தினுள் வைக்கவும், பதமானதும் உடனே, சிறுசிறு சதுரத் துண்டுகளாக வெட்டி பரிமாறலாம். அல்லது ரிசு பேப்பரில் சுற்றி வைத்து விரும்பிய நேரங்களில் பரிமாறலாம்.

---



# கிராமத்துக்கு ஒளியூட்டும்

## மருதநில சுற்றுலாத்தலம்

க.தே.தாசன்

வவுனியா மாவட்டத்தின் வவுனியா பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஆசிக்குளம் கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்டதுதான் கல்நாட்டியங்குளம் கிராமம். வவுனியா நகரிலிருந்து 7 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கிராமம். கவனிப்பாரில்லாமல் இருந்த இந்தக் கிராமத்திற்கு இன்று பெருமளவானவர்கள் படையெடுக்க ஆரம்பித்துள்ளனர். அதற்கு காரணம், மருதநில சுற்றுலாத்தலம்.

இந்தக் கிராமத்தைச் சூழ வயலும் கோவில்களும் காணப்படுகின்றன. பல காலமாக வெறும் கல்லும் மலையுமாகக் காணப்பட்ட இடம் இது. இதனை சுற்றுலாத் தளமாக மாற்ற முடியுமென அந்தப்பகுதி மக்கள் விடுத்த தொடர்ச்சியான வேண்டுகோளையடுத்து, வவுனியா பகுதி அரசியல் பிரமுகர்கள் நேரடியாக அங்கு சென்று பார்வையிட்டதுடன், அதனை சுற்றுலாத்தளமாக்கவும் முயற்சிகள் செய்தனர். அதன் பிரதிபலனாக சுற்றுலாத்தலம் ஒன்று உருவாகியுள்ளது.

2 மில்லியன் ரூபா செலவில் முதற்கட்ட வேலைகள் இப்போது நிறைவடைந்து உள்ளன. அந்த சுற்றுலாத்தலத்திற்கு விஜயம் மேற்கொள்ளும் போது சுற்றுலாத்தலம் எங்குமே அமைதியாகஇருப்பதை உணரக்கூடியதாக இருப்பதுடன் கல்நாட்டிய குளத்தின் பகுதியில் இருந்து வயல்களுக்கு மேற்படி சுற்றுலாத்தலத்திற்கு அருகில்உள்ள வாய்க்கால் ஊடாக சலசலத்து ஓடிச்செல்லும் நீரின் காட்சி இவ் சுற்றுலாத்தலத்தை இன்னும் மெருகூட்டுகின்றது. வினோத ஒலியுடன் இன்னிசையையும் பறவைகளின் காட்சியும் கண்ணுக்கு இதம் தருகின்றது.

ஆகவே விடுமுறை காலங்களை கழிப்பதற்காக பல ரூபாய்களை செலவு செய்து பிரயாணங்களை மேற்கொள்வதை விட இப்படியான நமது கிராமங்களில் உள்ள சிறப்பான விடயங்களை இனங்கண்டு அவற்றினை அழகுபடுத்தி சிறப்பான பொழுதுகளைக் கழிக்கலாம்.





# வீட்டின் உள்ளே...

என்னதான் வீட்டின் வெளிப்புறத்தை பணத்தை கொட்டி செலவு செய்தாலும் வீட்டின் உட்புறங்களும் அதை ஈடு செய்யும் வகையில் அழகாக திழ வேண்டியது அவசியம். குறைந்த செலவிலேயே வீட்டை உள் அலங்காரங்களால் அழகுபடுத்திவிட முடியும். அதற்கு செய்ய வேண்டிய விஷயங்களை பார்ப்போம்.

தரைகளுக்கு பெரிய வெர்டிபைட் டைல்ஸ் போடுவது இப்போது வழக்கமாக இருக்கிறது. மார்பிள் மற்றும் கிரானைட் கற்களை விட இவை பல டிசைன்களில் வருவதால் பெரும்பாலான மக்கள் இதை விரும்புகிறார்கள். குறுகிய பரப்பளவு கொண்ட அறைகளுக்கு வெளிர் நிறங்கள் கொண்ட டைல்ஸ்களை பயன்படுத்தலாம். அவை அறைகள் பெரிதாக இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும்.

வீட்டின் முக்கியமான, முகப்பு அறையாக விளங்கும் வரவேற்பறையில் செய்யப்படும் உள் அலங்காரம் மற்ற அறைகளுக்கும் அழகு சேர்க்கும். பொதுவாக வரவேற்பறைக்கு ஏதாவது ஒரு அடர் நிறத்தை தேர்வு செய்யும் பழக்கம் இருக்கிறது. அப்படி நான்கு சுவர்களிலும் அடர் நிறத்தை பூசினால் அறை இருள் சூழ்ந்தும், பார்ப்பதற்கு சிறியதாகவும் தோற்றமளிக்கும். இதை தவிர்க்க சுவரின் ஒரு பக்கத்தில் மட்டும் பளிச்சென்று பிரகாசத்தை தரும் அடர் நிறத்தை பூசலாம். மற்ற மூன்று சுவர்களிலும் வெளிர் நிறத்தை பூசினால் அறையும் பளிச்சென்று தோன்றும். பார்ப்பதற்கு அழகாகவும் தெரியும். அறையும் பெரியதாக தோற்றமளிக்கும்.

வரவேற்பு அறையை அழகுபடுத்த வேண்டும் என்று அலங்கார பொருட்களை குவித்துவிடக்கூடாது. சில பேர் 'பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறதே' என்று போகும் இடத்தில் கண்ணில் படும் பொருட்களையெல்லாம் வாங்கி வந்து வரவேற்பறையின் அலமாரியை நிறைத்து வைத்து விடுவார்கள். தவிர்க்க முடியாத அலங்கார பொருட்களை மட்டும் இடம்பெற செய்தால் போதும். அறை பார்ப்பதற்கு அழகாக தோன்றும்.

கதவு, ஜன்னல்களில் தொங்கவிடப்படும் திரைச்சீலை, ஷோபாவில் வைக்கப்படும் தலையணை, அலங்கார பொருட்கள் எல்லாம் ஒரே நிறத்தில் இருந்தால் அறையின் அழகு மேலும் அதிகரிக்கும். அத்துடன் அலங்கார பொருட்கள் அழகிய வேலைப்பாடுடன் வண்ணமயமாக இருந்தால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

கண்ணாடிகளால் செய்த அலங்கார பொருட்களையும் வரவேற்பறையில் வைக்கலாம். அது அறையை விசாலமாக காட்சிப் படுத்தும். குழந்தைகள் இருக்கும் வீடுகளில் கண்ணாடி பொருட்களை கைக்கு எட்டாத தொலைவில் வைத்திருப்பது நல்லது.

சிறிய இடத்தில் பெரிய பொருட்களை அடைத்து வைக்கக்கூடாது. அதிலும் வீட்டில் இருக்கும் குழந்தைகள், பெரியவர்கள் நடமாடுவதற்குஏதுவாகஇடம்இருந்தால்தான் வசதியாக இருக்கும்.

சமையலறையை பொறுத்தவரை மாடுலர் கிச்சன்தான் அழகு என்று பலரும் நினைக்கிறார்கள். அதுக்கு லட்சக்கணக்கில் செலவு செய்ய வேண்டியிருக்கும் என்றும் கருதுகிறார்கள். அதேபோன்ற வடிவமைப்பில் எளிமையாக குறைந்த செலவிலேயே சமையல் அறையை அழகுபடுத்தலாம். சமையல் மேடையை கடப்பாக்கல்லில் அமைத்து அதற்கு கருப்பு நிற பெயிண்டிங் தீட்டினால் பார்க்க அழகாக தெரியும். பொருட்கள் வைக்கும் இடத்தில் கதவுகளை பொருத்தி அதில் அழகிய வேலைப்பாடுகளை செய்தால் அதுவே மார்டன் கிச்சன் போன்ற தோற்றத்தை ஏற்படுத்திவிடும்.

சமையலறை அலமாரியில் எண்ணெய், தூசி, அழுக்குப் படியாமல் இருக்க காகிதங்களை மடித்து வைப்போம். அப்படி விரிக்கப் படும் காகிதங்களே அழகாக இருக்குமானால் அலமாரியை அலங்கரிப்பது சுலபம். அலமாரியின் உள் சுவரிலும் வண்ண டிசைன்கள் கலந்த காகிதங்களை ஒட்டினால், சமையல் அறை இன்னும் அழகாக தெரியும்.

அதுபோல் சுவர்களையும் சுவரொட்டிகள் கொண்டு அழகுபடுத்தலாம். செங்கல், கருங்கல் என சுவரின் சாயலை பிரதிபலிக்கும் டிசைன்கள் நிறைய இருக்கின்றன. அத்துடன் மனம் கவரும் விதவிதமான டிசைன்களை இடம்பெற செய்து அறையை அழகுபடுத்தலாம்.

திருமதி
ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி
Joykarthiha 3014@gmail.com






அப்பாடி! என்ன தாங்க முடியாத வெய்யில். கோடைகாலம் முடியும் வரை எல்லோர் வாயிலும் இந்த வசனத்தை கேட்கலாம். வெய்யில் காலத்தில் நமது உடலிலும் சருமத்திலும் பல பாதிப்புக்கள் ஏற்படுவது இயற்கை. உடல் ஆரோக்கியத்திற்கு உண்ணும் உணவு மிக முக்கியம். மேலும் நமது சருமத்தை பாதுகாக்க சில வழிமுறைகளை அக்கறையுடன் மேற்கொள்ள தான் வேண்டும். வெப்பத்தினால் அல்ரா வயலட் A.B கதிர்கள் நமது சருமத்தைர தாக்கும். அது 90 வீதம் நமது சருமத்தை பாதிப்படைய செய்யக் கூடியது, எனவே வெய்யிலில் செல்லும் முன்னர் s.p.f (சன் புறடெக்ஷன் பக்ரர்) அடங்கிய சன் கிறீம் லோசன் போடுவது நல்லது.

இயற்கையான பொருட்களை கொண்டு நமது சருமத்தை பாதுகாக்க இயலாதா என்ற கேள்வியும் சந்தேகமும் பலருக்கு எழலாம். வெளியில் செல்லும் போது நேரத்தை மிச்சப்படுத்த வேண்டியும் சருமம் பாதிக்காமல் இருக்கவும் கிறீம் அல்லது லோசன் போடத் தான் வேண்டும.

இதை வெய்யிலில் செல்லும் முன்னர் பூசினால் எவ்வளவு நேரம் நமது தோல் பாதுகாப்பாக இருக்கும். s.p.f 10, 15, 50, 60 எண் வரை கூட உண்டு. இதில் ஒரு எண்ணிற்கு 5 நிமிடங்கள் என்ற கணக்கில் நமது தோலை வெய்யிலில் இருந்து பாதுகாக்கலாம். அதாவது நீங்கள் s.p.f 15 அடங்கிய கிறீம் பூசினால் 75 நிமிடம் உங்கள் சருமத்தை பாதுகாக்கலாம். குறிப்பிட்ட நிமிடங்களுக்கு பிறகு திரும்பவும் முகம் கழுவி கிறீமை பிறஸாக பூச வேண்டும்.

சிலர் s.p.f அடங்கிய க்ரீம் பூசியதால் கவலையில்லை என நாள் முழுதும் வெயிலில் அலைவார்கள். இதனால் எந்த பயனுமில்லை. பொதுவாக 30 எண் வரை போடுவது அதிக பாதிப்பில்லை. s.p.f க்ரீமில் எண்ணெய்ப் பசை இருப்பதால் 60 எண் வரை உபயோகிக்கும் பொழுது வியர்வை வெளிவராமலிருக்கும்.

sfp அடங்கிய க்ரீமில் Pa Ba எனப்படும் இரசாயனக் கலவை உள்ளது. இரசாயனக் கலவை அலேர்ஜி உள்ளவர்கள் அதை தவிர்க்கவும். அல்லது சருமப் பரிசோதனைக்குப் பிறகு சரியான க்ரீமை தேர்ந்தெடுத்துப் போடவும்.

sfp க்ரீமை விரும்பாதவர்கள் ஃபவுண்டேசன் போடலாம். நமது தோலில் நிறத்திற்கு தகுந்த மாதிரி உள்ளவற்றை தேர்ந்தெடுத்து போட வேண்டும். தற்பொழுது ஃபவுண்டேசனை sfp கலந்து வருகின்றது. வீட்டில் தானே இருக்கின்றோம் இது எனக்கு தேவையில்லை என்ற உணர்வு பெரும்பாலான இல்லத்தரசிகளுக்குள்ளது. வீட்டினுள் இருந்தாலும் வெப்பத்தின் தாக்கத்தாலும் அடுப்படியில் இருந்து வேலை பார்க்கும் பொழுதும் சருமம் பாதிப்பிற்குள்ளாகும். எனவே அக்கறையுடன் சருமத்தை பராமரிக்க வேண்டும். எனக்கு கெமிக்கலே ஆகாது. வீட்டிலிருக்கும் பொருட்களை வைத்து தான் சருமத்தை பாதுகாப்பேன் என்பவர்கள் கீழே குறிப்பிடப்பட்டிருப்பவைகளைச் செய்யலாம்.

### தலைமுடிக்கு கற்றழை

தலை முடி பராமரிப்பிற்கு கற்றாழை உபயோகித்து குளிர்ச்சியை கொடுக்கம். ஆனால் சிலர் தெரியாமல் வீட்டிலுள்ள கற்றாழையை அப்படியே உபயோகிப்பார்கள். இது தவறான முறையாகும். இதில் நச்சுப் பொருள் கலந்திருப்பதால் அப்படியே உபயோகிப்பது அரிப்புடன் தோலையும் பாதித்து விடும். எனவே பதப்படுத்தப்பட்ட கற்றாழையை உபயோகிக்க வேண்டும். இத்துடன் விட்டமின் மற்றும் இதரச் சத்துக்களும் சேர்ந்த கற்றாழை ஜெல் வடிவிலும் கிடைக்கின்றது. அதை உபயோகப்படுத்தலாம்.

### மருதாணி

உடலுக்கு குளிர்ச்சியை கொடுக்க கூடியது. சிலர் வீட்டிலுள்ள செடியிலிருந்து மருதாணியை பறித்து அரைத்து அப்படியே போடுவார்கள். இதனால் முடி உலர்ந்து கொட்ட ஆரம்பிக்கும். ஹென்னா நல்லதொரு கண்டிஷனராக செயல்படும். முறையாக மருதாணியைப் பயன்படுத்தினால் நல்ல விளைவுகளையும் தவறாகப் பயன்படுத்தினால் மோசமான விளைவுகளையும் ஏற்படுத்தி விடும்.

மருதாணிப் பௌடர் 250 கிராம்
நெல்லி முல்லி - சிறிதளவு
தயிர் ஒரு கப்
முட்டை - 1
நல்லெண்ணெய் - 2 டிஸ்பூன்
எழமிச்சம்பழச் சாறு - 8 முதல் 10 சொட்டுக்கள்

இவை கலந்து தலையில் தேய்த்து அரை மணி நேரம் ஊற வைத்துக் குளிக்கலாம்.

தொடரும்...



# மஞ்சள் சொல்லும் ரகசியம்

கறி மஞ்சளிலே ஆண், பெண் என இருபாலும் உண்டு. குடம் போன்ற மஞ்சளை பெண் என்றும், விரல் போன்ற மஞ்சளை ஆண் என்றும் சொல்வார்கள். பெண்கள் பூசிக்கொள்ளப் பயன்படுத்துவது பெண் மஞ்சளைத்தான்.

பெண்கள் மஞ்சளைப் பூசுவதனால் பித்தம், வாதம், வாந்தி தோஷங்கள் அனைத்தும் நீங்குகிறது என்று மருத்துவ சாத்திரம் கூறுகிறது. அதுமட்டுமின்றி மஞ்சளினால் முகத்தில் மினுமினுப்பு உண்டாகும். மற்றும் முகத்தில் தோன்றும் பருக்கள், தேமல்கள் போன்ற சரும வியாதிகளைப் போக்குவது மட்டுமின்றி தூக்கத்திலும் இனிய சுகம் காணலாம். இனி நோய்களையும் அதை விரட்டும் மஞ்சளின் பயன்களையும் பார்ப்போம்.

கஸ்தூரி மஞ்சளை அரைத்துத் தடவிவர முகப்பரு விரைவில் மறையும். அத்துடன் குடமஞ்சளையும் சந்தனத்தையும் குழைத்துத் தடவி வந்தாலும் பருக்கள் மறையும். சாதாரண மஞ்சள் தூளை பாலேட்டுடன் அதாவது பாலாடையுடன் கலந்து குழைத்து முகத்தில் இரவில் பற்றுப் போட்டுக் கொண்டு படுத்துவிட்டால் காலையில் கழுவி விடலாம். இந்தவகைகளில் முகப்பருக்களை அகற்றலாம். பெண்கள் மஞ்சள் பூசிக்கொள்வதனால் முகத்திற்கு வசீகரத்தன்மை ஏற்படுகிறது. வியர்வையால் ஏற்படும் நாற்றம் மறைகிறது. சுவாசிக்கும் காற்றிலுள்ள நோய்க்கிருமிகள் அழிவடைகின்றன. நவநாகரிக அழகுசாதனங் களைப் போல் சரும வறட்சியோ, முதுமைக் குரிய குறிகளையோ மஞ்சள் தோற்றுவிப் பதில்லை. பெண்கள் மஞ்சள் குளித்து மஞ்சள லான குங்குமத்தை அணிந்துகொண்டிருந்தால் பார்வையால் கவரும் தன்மை படைத்த ஹிப்னாடிஸ்களால் கூட கவர முடிவதில்லை. அத்தனை மகிமை இந்த மங்கள மஞ்சளுக்கு.

குழந்தைகளின் கல்லீரல் நோய்களுக்கும், பாண்டுவுக்கும், பசும்பாலில் மஞ்சளைத் தட்டிப் போட்டுக் காய்ச்சிய கசாயத்தைக் கொடுத்துவர குணமாகும். மஞ்சளையும் மிளகையும் சரிசமமாக எடுத்து அரைத்து விழுதை மோரில் கலந்து சாப்பிட்டுவர பெண் களுக்கு மாதவிடாய்க் காலங்களில் வரும தலைவலி, வயிற்றுவலி எல்லாம் குணமாகும்.

இரத்தக்கட்டை அதாவது இரத்தம் கண்டினால் அதை நீக்குவதில் மஞ் சளுக்கு நிகரான மருந்து இல்லையென்றே சொல்லலாம். டிஞ்சர் அயோடின், டிஞ் சர் பென்சாயினைக் காட்டிலும் சிறப்பாக வேலை செய்கிறது என்றால் மஞ்சளின் பெருமையை என்னவென்று சொல்வது.

மஞ்சள் தூளை நெய் அல்லது பாலோடு கலந்து சாப்பிட்டு வந்தால் சாதாரண



தொண்டைப்புண் குணமாகிறது. மஞ் சளையும் வேப்பிலையையும் அரைத்து உடம்பில் ஏற்படும் புண்களின் அரிப்பிற்கு பூசி வரலாம். அம்மை நோயில் கூட அரிப்பு ஏற்படும் சமயங்களில் மேற்கண்ட முறையை அனுசரித்து வந்தால் அரிப்புகள் அடங்கி, புண்களும் சீக்கிரம் ஆறிவிடும். தொடர்ந்து மஞ்சளைத் தேய்த்து குளித்துவர அம்மைத் தழும்புகளும் மறைந்து போகும். உடலில் ஓடும் இரத்தமும் சுத்தமாகும்.

கஸ்தூரி மஞ்சள், வெள்ளை மிளகு, நெல்லிவித்து,வேப்பமுத்து, கடுக்காய்த் தோல் முதலியவற்றை சம எடை எடுத்து தூள் செய்து தேவையான அளவு எடுத்து பாலில் காய்ச்சித் தேய்த்து வாரம் ஒரு முறை நீராடி வர மங்கல்பார்வை, கிட்டப்பார்வை, தூரப்பார்வை முதலிய பிணிகள் அணுகுவதில்லை. இத்தகைய நீராடலுக்கு பஞ்சகல்ப ஸ்நானம் என்று பெயர்.

சில சமயங்களில் உடலில் குத்தல் வலிகள் தோன்றும். அநேகமாக வாத மேலீட்டால் அப்படி ஏற்படும். அதற்கு மஞ்சளை 50 கிராம் அளவிற்கு எடுத்து சற்று நசுக்கி அரைலிட்டர் நீர் விட்டு கால் லிட்டராக சுண்டும் வரை காய்ச்சி வடிகட்டி சிறிது சர்க்கரை சேர்த்து சாப்பிட குணம் தெரியும். இதே பிணிக்கு மற்றொரு மருத்துவமும் உண்டு. மஞ்சளையும் ஓமத்தையும் சம அளவு எடுத்து நசுக்கி அரை லிட்டர் அளவு நீர் விட்டு கால் லிட்டர் அளவு வரும்வரை சுண்டக் காய்ச்சவும். அதில் 100 கிராம் நல்லெண்ணெய் விட்டு சேர்த்துக் காய்ச்சவும். அது இறுகித் தேன் பதமாகும்போது 10 கிராம் கற்பூரத்தை அதில் பொடித்துப் போட்டு இறக்கி ஆறவைத்து உடலில் வாத வலியுள்ள இடங்களில் நன்றாக அழுத்தித தடவித் தேய்த்து வர உடல் வலி மறையும்.

**குழந்தைகள் அவ்வப்பொழுது இருமிக் கொண்டு சிரமப்பட்டால் அதற்கு ஒரு மிளகு அளவு பெருங்காயத்தை வெந்நீரில் கரைத்து அதில் சிறிது மஞ்சள் பொடியைத தூவி நான்கு மணிக்கு ஒரு தடவை கொடுத்து வந்தால் போதும் இருமல் உடனே நின்றுவிடும்.**

மரமஞ்சளை அரைத்து நீரில் கலந்து உள்ளுக்குச் சாப்பிட்டால் மூல நோய்க்கு சொல்லப்பட்ட அருமருந்தாகும். இதைச் சாப்பிடுவதுடன் ஆசன வாய்ப்பகுதியிலும் தாராளமாகத் தடவலாம். எந்த வகையான மூல நோயும் உடன் சரியாகும்.

மரமஞ்சளை 100 கிராம் அளவிற்கு எடுத்து விழுதாக அரைத்து அரைலிட்டர் நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சி தைலமாக தயாரித்து வைத்துக் கொண்டால் இதை புரையோடிப் போன புண்கள், கிரந்திப் புண்கள், கறுப்பு பருக்கள் மற்றும் சரும நோய்கள் அனைத்திற்கும் தடவி வர உடனே குணமாகும்.

ஆஸ்த்மா நோயின் காரணமாக மூச்சி ழுப்பும் இரைப்பும் அதிகமாக இருக்கும்போது கஸ்தூரி மஞ்சளை தீயில் சுட்டு புகையை மூக்கின் வழியாக உள்ளிழுத்தால் உடனே இரைப்பு நிற்கும். இதைத் தொடர்ந்து செய்து வந்தால் பிறகு அந்தப் பொல்லாத மூச்சுத் திணறல்வரவேவராது. அத்துடன் அதிபோதை யில் இருப்பவரது போதையை அகற்றவும் இதே முறையைக் கையாள்வதன் மூலம் போதையை அகற்றலாம். இது மட்டுமின்றி இப்புகை காச நோய்க்கு எதிர்ப்புத் தெரிவித்து அதன் கடுமையைத் தடுக்கிறது. இதே மஞ்சள் புகையை நாசியின் வழியாக உள்ளிழுத்தால் தலைவலி, ஜலதோஷம் என்பன சரியாவதுடன் விஷத்தினால் ஏற்படும் பாதிப்புகளும் மாறுகிறது.

குழந்தைகள் அவ்வப்பொழுது இருமிக் கொண்டு சிரமப்பட்டால் அதற்கு ஒரு மிளகு அளவு பெருங்காயத்தை வெந்நீரில் கரைத்து அதில் சிறிது மஞ்சள் பொடியைத தூவி நான்கு மணிக்கு ஒரு தடவை கொடுத்து வந்தால் போதும் இருமல் உடனே நின்றுவிடும். மற்றும் இந்த மருத்துவத்தினால் தொண்டைப் புண், சளியடைப்பு போன்ற குறைபாடுகளும் நீங்குகிறது.


மஞ்சளை நன்கு கரியாக்கிப் பொடித்து சிறிது உட்கொண்டால் மாரடைப்பு நீங்குகிறது. மேகநோய் அகலுகிறது. காயம் புண், கட்டிகள் இவற்றின் மீது பூசிவந்தால் அவை குணமாகின்றன. மஞ்சள் கரித்தூளை தேனில் குழைத்து உள்ளுக்குச் சாப்பிட்டு வர மேகப்புண், உடல் சருமத் தடிப்பு, ஊறல் எல்லாம் சரியாகின்றன.

பொன்னிறமும் மென்சருமமும் பெண்கள் பெற கஸ்தூரி மஞ்சள்,பச்சைப்பயறு, கடலைப்பருப்பு என்பனவற்றை சம அளவில் எடுத்து அரைத்துப் பொடியாக்கி குளிக்கும் போது உடலுக்குத் தேய்த்துக் குளித்து வரலாம். அத்துடன் வியர்வை நாற்றமும் சுத்தமாக அகன்றுவிடும்.

இதுமட்டுமின்றி தற்போதைய விஞ் ஞான ஆராய்ச்சியில் அமெரிக்காவின் டெக்சாஸ் என்னும் பல்கலைக்கழகத்தின் எம்.டி.ஆண்டர்சண் புற்று நோய் மையம் நடத்திய ஆய்வில் மஞ்சளுக்கு தோல் புற்று நோயை எதிர்க்கும் ஆற்றல் உண்டு என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தோல் புற்று நோய்க்கு காரணமான 'மெலனோமா' என்ற கலங்களின் வளர்ச்சியை தடுத்து நிறுத்தக் கூடிய ஆற்றல் மஞ்சளுக்குண்டு என்றும், புற்று நோய்க்கு காரணமான செல்கள் வளர்ச்சி பெறாமல்தானாகவே அழிந்துவிடக்கூடியசூழ் நிலையை மஞ்சள் ஏற்படுத்துகிறது என்பதும் ஆய்வில் கண்டறியப்பட்ட அரிய உண்மை யாகும். இந்த மையத்தின் பேராசிரியர் பாரத். பி.அகர்வால் தகுந்த அளவில் மஞ்சள் சேர்ந்த உணவுப் பொருட்களை உண்பது நமது உடல் நலத்திற்கு உகந்தது என்று தெரிவித்துள்ளார். ஆர்த்தரைட்டிஸ், புற்று நோய் போன்ற பல்வேறு நோய்களுக்கு காரணமான கக்பாபி என்ற ஒருவகையான சக்தி வாய்ந்த புரதம் தோன்றாமல் இருப்பதற்கு மஞ்சள் உதவி செய்கிறது என்பதும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

தாய்ப்பால் அதிகளவில் சுரப்பிக்கச் செய்யும் தன்மையும் இந்த மஞ்சளுக்கு உண்டு. பிரசவித்த பெண்களுக்கு நீராட்டும் போது மஞ்சளைப் பூசிக் குளிப்பதன் மூலமும், உணவில் சேர்ப்பதன் மூலமும் தாய்ப்பால் சுரப்பை அதிகரிக்கச் செய்யலாம். உணவில் சேர்ப்பதற்கு உகந்த முறை மஞ்சளும் பூண்டும் சேர்த்து சொதி வைத்துக் கொடுக்கலாம். இத்துடன் கருவாட்டையும் சேர்ந்தால் அதிக பலன் கிடைக்கும். ராக்கட்டுக்கு எரிபொரு ளாகப் பயன்படுத்தக்கூடிய சக்தி தாய்ப் பாலுக்கு உண்டு என்பது அதி நவீன விஞ் ஞானக் கண்டுபிடிப்பாகும். அப்படிப்பட்ட தாய்ப்பாலையே அதிகளவில் சுரக்கச் செய்யும் தன்மை மஞ்சளுக்கு உண்டெனின் மஞ்சளின் பெருமையை எப்படி வர்ணிப்பது.

மஞ்சளுக்கு காஞ்சனி, அர்சனம், ரஞ்சனி, பீதம், கோணிதம் என்ற மருத்துவப் பெயர்களுமுண்டு. சங்க நூல்களிலேயே மஞ்சள் கிழங்கைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. 'சிறுபசு மஞ்சளோடு நறுவிரை நெளித்து' என்ற அடி திருமுருகாற்றுப்படையில் உள்ளது. இந்த அடி இறைவனுக்கே மஞ்சள் பயன்பட்டதை உணர்த்துகிறது. பழமை நிறைந்த மஞ்சள் மருத்துவத்தில் புதுமை படைப்பதென்பது வியத்தகு விந்தையாகும்.




# Good bye "5-3"

அன்ரூஇன்னேஷ்

இலங்கை கிரிக்கெட்டிற்கு இது போதாத காலம். ரசிகர்களிற்குத்தான் சத்தியசோதனை. மனதை திடப்படுத்திக் கொண்டு நடப்பவற்றை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதுதான். முன்னணி வீரர்களின் ஓய்வு, தோல்வி, மகா மோசமான தோல்விகள், மலிங்க மல்லுக்கட்டல் என நீண்ட துயரக்கதை இப்பொழுது ரங்கன ஹேரத்தின் ஒருநாள், T 20 போட்டி ஓய்வு அறிவிப்பில் வந்து நிற்கிறது.

38 வயதான ரங்கன ஹேரத் இதற்கு மேலும் இலங்கையணிக்கு என்ன செய்ய முடியும்? இனியும் ஹேரத் இலங்கையணியின் தலைமை பந்துவீச்சாளராக முயற்சித்துக் கொண்டேயிருக்க வேண்டுமா? வயதான வீரருக்கு மாற்றீட்டை கண்டுபிடிக்க வேண்டாமா?

ஹேரத்தின் ஓய்வில் விமர்சிக்க ஒன்றுமில்லை. மிகச்சரியான, விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட முடிவுதான். அதில் சந்தேகப்பட ஒன்றுமில்லை. ரங்கன ஹேரத் இதற்கு மேலும் ஒருநாள் போட்டிகளில் நீடிப்பது, இலங்கைக்கு தற்கால ஆறுதல்களைத்தான் தருமே தவிர, அடுத்த உலககிண்ணத்தை இலக்கு வைத்து அணியொன்றை கட்டியெழுப்புவதில் தாமதத்தைதான் ஏற்படுத்தும்.

38 வயதான ஹேரத் 71 ஒருநாள் போட்டிகளில் மாத்திரமே விளையாடியுள்ளார். 74 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். 17 T 20 போட்டிகளில் 18 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

குறுகிய வடிவங்களிலான ஒருநாள், T 20 போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றாலும் ஹேரத் தொடர்ந்தும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளார். அவரது ஓய்வு. அறிவிப்பில் அதை தெளிவாக குறிப்பிட்டுள்ளார். ஓய்வு பற்றிய ஹேரத்தின் அறிக்கையில் இப்படி கூறப்பட்டிருந்தது. "ஒவ்வொரு வீரரும் மிகச்சரியான தருணத்தில் தனது பயணத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும். 2019 உலககிண்ண போட்டிக்கான இப்பொழுதிருந்தே உருவாக்க வேண்டும் என கருதுகிறேன். அதற்கு வழிவிடும் வகையில் T 20 மற்றும் ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுகிறேன். இனி டெஸ்ட் போட்டிகளில் மட்டும் கவனம் செலுத்தவுள்ளேன்" என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய சுழற்பந்துவீச்சாளர்களில், குறிப்பாக இடதுகை சுழற்பந்துவீச்சாளர்களில் தலைசிறந்தவர் ஹேரத்தான் என்பதை அடித்து சொல்லலாம். அதற்கு சாட்சியாக ஹேரத்தின் பல இன்னிங்ஸ்கள் உள்ளன.

என்னதான் தலைசிறந்த பந்துவீச்சாளராக இருந்தபோதும், ஹேரத் ஆடிய கிரிக்கெட் சிறியதே. முத்தையா முரளிதரன் என்ற கிரிக்கெட் சகாப்தத்தை கடந்து ஹேரத்தால் முன்னேற முடியவில்லை. முரளிதரன் ஆடிக் கொண்டிருந்த காலத்தில் இன்னொரு சுழற்பந்துவீச்சாளராக ஹேரத்திற்கு இடம் கிடைக்க வாய்ப்பேயிருக்கவில்லை. போதாதற்கு இரண்டாவது சுழற்பந்துவீச்சாளராக அவரை இணைக்க வேண்டிய அவசியத்தை சகலதுறை வீரர்கள் இல்லாமலாக்கிக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக, சனத் ஜயசூரியா. ஒருநாள், டெஸ்ட் போட்டிகளில் இலங்கையணியின் இரண்டாவது சுழற்பந்து வீச்சாளர் பாத்திரத்தை அவர் மிகச் சிறப்பாக செய்து கொண்டிருந்ததால் ஹேரத்திற்கான இடம் கிடைக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில வாய்ப்புக்கள் மட்டுமே அவருக்கு கிடைத்துக் கொண்டிருந்தது. முரளிதரன் இல்லாத போட்டிகளிற்காக ஹேரத் காத்திருக்க வேண்டியிருந்தது. முரளிதரன் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றபின்னர்தான் ஹேரத் இலங்கையணியின் நிரந்தர பந்துவீச்சாளரானார்.




குறுகிய வடிவ ஆட்டங்களில் அவரால் மகத்தான வீரராக உருமாறமுடியாமல் போக தாமத வருகை ஒருகாரணமாக இருந்திருக்கலாம். எப்படியோ இலங்கையணியின் மனதில் நிற்கும் வீரர்தான் ஹேரத்.

கிரிக்கெட் வாழ்வின் பிற்பகுதியில் அணியில் நிரந்தர இடம்பிடித்த ஹேரத்தால், ஒருநாள் அணியின் தலைமைப்பந்துவீச்சாளர் ஸ்தானத்தை பெற முடியவில்லை. சில சமயங்களில் இளமைக்காலத்திலேயே அணியில் நிரந்தர இடம் கிடைத்திருந்தால், அவர் அப்படி ஆகியிருக்கலாம். ஆனால், அவரால் ஓய்வுபெறும்வரை குறுகிய வடிவங்களிலான ஒருநாள், T 20 போட்டிகளில் இலங்கையணியின் பந்துவீச்சிற்கு தலைமைதாங்க முடியவில்லை. ஆனால், டெஸ்டில் அவர்தான் தலைமைப்பந்து வீச்சாளர். டில்ருவான் பெரேரா போன்றவர்கள் இடையிடையே மிரட்டினாலும், ஹேரத்தான் இன்றுவரை இலங்கையின் டெஸ்ட் அணியின் தலைமை பந்துவீச்சாளர் என்பதில் சந்தேகமேயில்லை.

சிறந்த பந்துவீச்சு 20 ஓட்டங்களிற்கு நான்கு விக்கெட். இந்தியாவிற்கு எதிராக பெற்றது. பரபரப்பான அந்தப் போட்டியில் இந்தியா ஒரு விக்கெட்டால் வெற்றிபெற்றது. தலைசிறந்த இடதுகை சுழற்பந்துவீச்சாளராக உருவெடுத்த ஹேரத்தின் கிரிக்கெட் வாழ்வில் மகத்தான நிறைய இன்னிங்ஸ்கள் டெஸ்ட் போட்டிகளில் உள்ளன. ரசிகர்களாலும், கிரிக்கெட்டர்களாலும் என்றென்றும் நினைவுகூரத்தக்கமகத்தான பலடெஸ்ட் இன்னிங்ஸை ஆடிய ஹேரத்தால் அப்படியொரு ஒருநாள் இன்னிங்சையும் ஆட முடியவில்லை. ஒருநாள் போட்டிகளில் அவரது விரல்கள் மந்திர மாயங்கள் புரிய முடியவில்லை.

ஆனால், T 20 போட்டிகளில் அப்படியொரு இன்னிங்ஸ் உள்ளது. இலங்கை உலககிண்ணத்தை வென்ற 2014 உலககிண்ண தொடர். நியுசிலாந்துடன் இலங்கை மோதியது. முதலில் ஆடிய இலங்கை பெற்றது வெறும் 119 ஓட்டங்கள். நியுசிலாந்து சாதாரணமாக ஊதித்தள்ளிவிட்டு போய்விடும் என்ற எதிர்பார்ப்பை ரங்கன ஹேரத் முழுதாக நிர்மூலமாக்கினார். வெறும் 3 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெட்டை சாய்த்தார். அந்த தடையை கடந்து சென்றுதான் இலங்கை கிண்ணத்தை வென்றது.

மிகதாமதமாக குறுகிய வடிவ கிரிக்கெட்டுக்குள் பிரவேசித்தவர், டெஸ்ட் போல அவற்றில் சோபிக்க முடியாதவர் என ஹேரத் பற்றிய விமர்சனங்கள் இருந்தன. முரளி, வாஸ் போல ஒருநாள் போட்டிகளில் விக்கெட் வேட்டையாடும் ஒருவராக ஹேரத் இருக்கவில்லையென்பது உண்மைதான். ஆனால், மூத்தவீரர்களின் ஓய்வின் பின்னர் இலங்கையணி மனதளவிலும் இளைய அணியாக தன்னை உருவகப்படுத்தும் சூழலில், ஹேரத் ஒரு நம்பிக்கையொளியாக இருந்தார். அவரது மூப்பு அணிக்கு உந்துசக்தியாகவும், வழிகாட்டியாகவும் இருந்தது.

மூத்தவீரர்கள் வரிசையாக ஓய்வுபெற்றபோது புதிய அணியொன்றை கட்டியெழுப்பும் வழி தெரியாமல் இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் விழிபிதுங்கி நின்றது. இன்றுவரை இலங்கையணினை மீட்கும் வழிகளை கிரிக்கெட் நிர்வாகம் கண்டடையவில்லை. ஓய்வுபெற்ற மூத்தவீரர்களின் இடங்களை நிரப்புவார்கள் என எதிர்பார்ப்பை தூண்டும் ஒரு பதிலீட்டு வீரரைதானும் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. மாறாக ஒவ்வொரு மோசமான தோல்விக்கு பின்னும் அதற்கான பொறுப்பை ஏற்பவர்கள் யார் என்றுதான் கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தநிலையில் ஹேரத் தொடர்ந்து கிரிக்கெட் ஆடினால், தேர்வாளர்கள் சற்று ஆசுவாசமாக இருப்பார்களே தவிர, உலககிண்ண அணியை திட்டமிட முடியாது. இளையவர்களை கண்டுபிடிக்க வழியேற்படுத்தி ஹேரத் தானாக ஒதுங்கிச் சென்றுவிடுகிறார். அடுத்த ஹேரத் யார் என்பதே இனி கேள்வியாக இருக்கும்.

அதீத திறமையிருந்தும் துரதிஷ்டம் நிறைந்த வீரராகத்தான் ஹேரத் இருந்தார். இல்லாவிட்டால் அணிக்குள் நிரந்தர இடம் பிடிக்க இத்தனை காலம் காத்திருந்திருக்க வேண்டியதில்லை. குறுகிய வடிவ ஆட்டங்களில் அவரால் மகத்தான வீரராக உருமாற முடியாமல் போக இந்த தாமத வருகை ஒருகாரணமாக இருந்திருக்கலாம். எப்படியோ இலங்கையணியின் மனதில் நிற்கும் வீரர்தான் ஹேரத்.


Good bye "5-3".

# சந்திரகுமார் விலகல் சறுக்கலில்லை

## மௌனம் கலைத்தார் டக்ளஸ் தேவானந்தா

சலசலத்து கிடக்கிறது ஈ.பி.டி.பி முகாம். சந்திரகுமாரின் வெளியேற்றத்துடன் கட்சிக்குள் மயான அமைதி நிலவுகிறது. சந்திரகுமார் என்ற பெயரை உச்சரித்தாலே கட்சிக்காரர்கள் காணாமல் போய்விடுகிறார்கள். இந்த விடயம் பற்றி பேசக்கூடாதென்பதில் அவ்வளவு தீவிரம்.

சந்திரகுமாரின் வெளியேற்றம் பற்றி வாய் திறப்பதில்லையென ஈ.பி.டி.பி கட்சி கனத்த மௌனம் சாதித்துக் கொண்டிருக்க, அந்த கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை முதலில் பகிரங்கமாக பேச வைத்துள்ளோம். அவருடனான நேர்காணல் இது.



**கேள்வி:** உங்கள் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான சந்திரகுமார் திடீரென கட்சியைவிட்டு விலகிச் சென்றுள்ளார். விலகளின் பின்னர் சந்திரகுமார் தரப்பு நிறைய அறிக்கைகளை விடுகிறார்கள். நீங்கள் கனத்த மௌனத்தை பேணுகின்றீர்கள். இதுபற்றி கட்சியின் நிலைப்பாடு என்ன?

**பதில்:** ஒரு புகையிரதப் பயணம்போல் அரசியல் கட்சி ஒன்றின் பயணத்திலும் பலர் வருவார்கள் போவார்கள். ஒரு ஜனநாயகக் கட்சியில் இவையெல்லாம் சகஜமானவைதான். புகையிரதம் அதன் இலக்கை நோக்கி பயணத்தை தொடர்வதைப்போல், கட்சியின் பயணமும் அதன் இலக்கு நோக்கி தொடரும்.

அவர் முன்னெடுத்த கட்சிப் பணிகள் தொடர்பாகவும், அவரது முயற்சிகள் தொடர்பாகவும், நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்காதது தொடர்பாகவும் கட்சிக்குள் எழுந்திருந்த கேள்விகள் தொடர்பாகவும் அவர் தன்னை சுயவிமர்சனத்திற்கு உட்படுத்தியிருப்பதாகவே நான் கருதுகின்றேன்.

**கேள்வி:** சந்திரகுமார் கிளிநொச்சியில் செல்வாக்கான ஈ.பி.டி.பி பிரமுகர். அவரது விலகல் அங்கு ஈ.பி.டி.பிக்கு சிக்கலை ஏற்படுத்துமா?

**பதில்:** அப்படி கட்சி கருதவில்லை. கிளிநொச்சி மாவட்டத்தின் கட்சியின் அமைப்பாளர் தோழர் தவநாதன் தலைமையில்கட்சிப் பணிகள் வழமைபோல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.;

**கேள்வி:** விலகளிற்கு சந்திரகுமார் சொன்ன பிரதான காரணம் ஈ.பி.டி.பியின் அரசியலை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்பது. அண்மைய தேர்தல்களில் உங்கள் கட்சியின் வாக்கு வங்கியில் சரிவு தென்படுகிறதல்லவா? இது சந்திரகுமாரின் குற்றச்சாட்டில் உண்மையுள்ளதென ஆகாதா?

**பதில்:**தமிழ் மக்களை உசுப்பேற்றி வாக்குகளை அபகரிக்கும் கபடத்தனமான அரசியல் நாடகத்தை ஈ.பி.டி.பி ஒருபோதும் செய்யவில்லை.



தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான நடைமுறைச்சாத்தியமான அணுகுமுறையையும், எமது மக்களை மேலும் அழிவுகளுக்குள் தள்ளிவிடாமல் அவர்களை பாதுகாத்து கௌரவமாக வாழ வைப்பதற்கும், தவறான அணுகுமுறைகளால் அழிந்துபோன எமது தாயகத்தை மீண்டும் அபிவிருத்தியால் கட்டியெழுப்புவதற்குமான வழிமுறைகளையே எமது அரசியலாக முன்னெடுத்துவருகின்றோம்.

எமது அரசியலை விமர்சிப்பவர்கள் எனப்படுவோர், தமிழ் மக்களை பாதுகாக்கவும் இல்லை, அழிவுகளைத் தடுத்து நிறுத்தவும் இல்லை. அரசியல் உரிமையைப் பெற்றுத்தரவும் இல்லை. இவற்றுக்கான ஆக்கபூர்வமான முயற்சிகளிலும் ஈடுபடவும் இல்லையென்பதும் வெளிப்படையானது. ஈ.பி.டி.பியின் தீர்க்கதரிசனமான அரசியல் பாதையிலேயே இன்று கூட்டமைப்பும் வந்து நிற்கின்றது. நாங்கள் மத்திய அரசுகளுடன் முன்னெடுத்த இணக்க அரசியல் போக்கையே இன்று கூட்டமைப்பும் பின்பற்றியிருக்கின்றார்கள்.

**கேள்வி:**நீண்டகாலமாக அரசுகளின் பங்காளியாக இருந்தீர்கள். இப்பொழுதுதான் வெளியில் நிற்கிறீர்கள். இந்த சூழ்நிலையில் எப்படியிருக்கிறது கட்சி நிலவரங்கள்?

**பதில்:** ஆம் நீண்டகாலமாக அமைச்சரவை அந்தஸ்துள்ள பல அமைச்சுப் பொறுப்புக்களை பொறுப்பேற்று எமது மக்களின் பொருளாதார மற்றும் வாழ்வாதார கோரிக்கைகளுக்கும், பிரச்சனைகளுக்கும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றோம். அது போல் எமது இளைஞர், யுவதிகளுக்கு ஆயிரக் கணக்கில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றேன். பாதுகாப்புக் காரணங்களுக்காகவென்று படையினர் கையகப்படுத்திய நிலங்களையும், காணிகளையும் முடியுமானவரை அர்த்தபூர்வமாக விடுவித்துள்ளோம். அதேபோல் தமிழ் மக்கள் போராடிப்பெற்ற அரசியல் உரிமைகளை பாதுகாப்பதற்கும்,தமிழ் மக்கள் பெறவேண்டிய அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கும் நடைமுறைச்சாத்தியமாக முன்னெடுத்து வருகின்றோம்.

இப்போது நீங்கள் கூறியதுபோல் அரச அதிகாரங்களுக்கு வெளியில் நின்று நிலைமையை அவதானிக்கின்றோம். கடந்த காலத்தில் நாங்கள் செய்த பணிகளை சீர்தூக்கிப் பார்க்கவும், எதிர்காலத்தில் செய்யவேண்டிய பணிகளை ஆய்வு செய்வதற்கும், எமது மக்களி தற்போதைய அபிப்பிராயங்களை ஆராய்ந்து அறிந்து கொள்ளவும் தற்போது கால அவகாசம் கிடைத்திருப்பதாகவே கருதுகின்றேன்.

**கேள்வி:** தற்போதைய அரசுடன் உறவுகள் என்ன நிலையில் உள்ளன? அரசில் இணையும் வாய்ப்புக்கள் உள்ளதா?

**பதில்:** புதிய அரசுடன் அரசியல் உறவுகளும், தொடர்புகளும் இருக்கின்றது. இல்லாவிட்டால் புதிய அரசியலமைப்பு சபையின் வழி நடத்தும் குழுவுக்கு பிரதமர் என்னையும் ஒரு உறுப்பினராக நியமித்திருக்க மாட்டாரல்லவா? இது தவிரவும் புதிய அரசாங்கம் தமிழ் மக்களின் நிலங்களையும், காணிகளையும் விடுவிக்க வேண்டும் என்பதையும், சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்பதையும், காணாமல் போனவர்கள் தொடர்பாக நியாயமான விசாரணை நடத்தப்பட்டு உண்மை கண்டறியப்பட வேண்டும் என்பதையும் புதிய அரசுக்கு தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றேன். அரசு முன்னெடுக்கும் தேசிய நல்லிணக்க முயற்சிகளுக்கும், மக்கள் நலன்சார்புத் திட்டங்களுக்கும் ஈ.பி.டி.பி பூரணமான ஆதரவை வழங்கும் என்பதையும் கூறியிருக்கின்றேன்.

இதேவேளை ஈ.பி.டி.பியை பங்கெடுக்குமாறு பிரதான தேசியக் கட்சிகள் கோரிக்கை விடுத்துவருவது உண்மைதான். ஆனாலும் அவர்களுடன் ஈ.பி.டி.பி தொடர்ந்து எமது மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சனைக்கும், வாழ்வாதார பிரச்சனைக்கும் தீர்வு காண்பது தொடர்பாகவும் ஏனைய முக்கிய பிரச்சனைகள் தொடர்பாகவும் தீர்வுகள் தேவை என்பதை வலியுறுத்தி பேச்சுக்களை நடத்திவருகின்றோம்.

**கேள்வி:**முதன் முதலாக தேசிய மாநாட்டை நடத்தப் போகின்றீர்கள். ஏன் திடீரென இந்த முடிவு கட்சிக்குள் ஏதாவது புனரமைப்பு நடக்கிறதா?

**பதில்:**வருகின்ற மே மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில்கட்சியின் தேசிய மாநாடுஇம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது. 8ஆம் திகதி எமது தீர்மானங்களை அறிவிக்கும் மாநாடு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இது திடீர் முடிவு அல்ல. கடந்த காலத்தில் வேலைப்பளு அதிகமாக இருந்ததால் சாத்தியப்படாமல் இருந்தது.

**கணினி திருத்தும்**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். **Maxs Pc**
**Tel : 077 313 1622 | 021 221 9404**

**வீடு வாடகைக்கு**

கோப்பாயில் சிறு குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு உண்டு.
**Tel : 0723063727**

**திருமண சேவை**

சூரியன் திருமண சேவை, மனோகரா சந்தி, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**கார் வாடகைக்கு**

திருமண கார் வாடகைக்கு உண்டு.
**Tel : 077 248 7234**

**தங்குமிடம்**

நாளாந்த அறை வாடகைக்கு உண்டு சலுகைக் கட்டணத்தில், மிலேனியம் உல்லாச பயணிகள் விடுதி மற்றும் உணவகம்.
**Tel : 077 601 6310**

**தேவை**

அச்சக வேலைக்கு வேலை ஆட்கள் தேவை அனுபவமுள்ள, அனுபவமற்ற, வேலை பழக விரும்பும் இருபாலரும் தொடர்பு கொள்ளலாம்.

கணணி பக்க வடிவமைப்பாளர்

இயந்திர KORD இயக்குனர்

புத்தக பைண்டிங்

தொடர்பு : 077 714 1444

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ் நகர் / நல்லூர் பிரதேசத்தில் சிறிய குடும்பத்திற்கு சகல வசதிகளைக் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 076 638 5626

கலர் மீன்கள், மீன் தொட்டிகள், அலங்காரப் பொருட்கள்,
வளர்ப்பு நாய்கள், குருவிகள், பறவை இனங்கள், கூடுகள்,
அலங்காரத் தாவரங்கள் மற்றும் பூச்சாடிகள் அனைத்தும் பெற முடியும்...




No. 917, K.K.S. Road, Jaffna. | yarlapp@gmail.com






ஒரு ஊரில் ஒரு கஞ்சமி வசித்து வந்தான். கஞ்சமி என்றால் ஊரில் தெரியாதவர்கள் இருக்க முடியாது. 100 ரூபா சம்பாதித்தால் எப்படியாவது 50 ரூபா மிச்சம் பிடிக்கும் திறமை கொண்டவன். காசை கைவிடுவது என்றால் உயிரை விடுவது போன்ற உணர்வு அவனுக்கு. உழைக்கும் பணத்தை குறைவாக செலவு செய்து மிகுதியை சேமிக்க வேண்டும் என்று எண்ணுபவன்.

ஒரு நாள் பழக்கடைக்கு சென்ற கஞ்சமி ஒரு பூசணிக்காய் தரும்படி கேட்டான். அன்று எல்லா மரக்கறிகளையும் விட விலை அதிகமாக பூசணிக்காய் தான் இருந்தது. எனவே கடைக்காரர் வியந்து போனார். என்னடா அதிசயம் கஞ்சமி இன்று விலை கூடிய மரக்கறி கேட்கிறாரே என்று. உடனே வியாபாரி நக்கலாக கேட்டார் 'என்ன கஞ்சமி இன்றைக்கு கொழுத்திற வெயிலிலும் மழை வரும் போல் உள்ளது. பூசணி விலை கொடுத்து வாங்கிறிங்கள்' என்றார்.

அதற்கு சிரித்து விட்டு கஞ்சமி சொன்னான் 'அட முதலாளியாரே பொலிஸ் சட்டத்தை கடுமையாக்கியுள்ளது. உங்களுக்கு தெரியாதோ' என்றான். வியாபாரி கேட்டார் என்ன சட்டம் கஞ்சமி என்று. அது ஒன்றுமில்லை எல்லோரும் கட்டாயம் கெல்மெட் போட்டு தான் வண்டி ஓட்ட வேண்டுமாம் என்றான். வியாபாரி சிரித்து விட்டு சொன்னார் நல்ல விடயம் தானே. அதற்கும் நீங்கள் பூசணி வாங்குவதற்கும் என்ன சம்மந்தம் கஞ்சமி என்றார். அதொன்றுமில்லை வியாபாரியாரே நான் வாரத்தில் குறைந்தது இரு தடவைதான் வண்டி எடுப்பேன். அதற்காக 1000 ரூபா கொடுத்து கெல்மெட் வாங்க முடியுமா. அது தான் பூசணியை வாங்கி சுத்தம் செய்து விட்டு பிறிச்சில் வைத்து குறிப்பிட்ட காலத்திற்கு பாவிக்கலாம் என்று வாங்குகின்றேன் என்றான் கஞ்சமி. வியாபாரி சிரித்து விட்டு சொன்னார் 'அட கஞ்சமி இதற்குமா கசவாரம் பார்ப்பாய். கெல்மெட் போடுவது விபத்தில் தலையை பாமுதுகாக்க தானே. அது நமது நன்மைக்கு போடப்பட்ட சட்டம் தானே. பூசணி என்பதை பொலிஸ் கண்டுபிடித்தால் நஸ்டஈடு கட்ட வேண்டி வரும் இந்த வேலை வேண்டாம் கஞ்கமி என்றான். அதற்கு கஞ்சமி 'அட மொக்கு வியாபாரியே.. இப்ப எல்லாம் பூசணிக்காய் போல தானே கெல்மெட் வருகிது. அது மட்டும் பாதுகாப்பா. இந்த பொலிஸ் இப்படி தான். நான் இவர்களை ஏமாற்றிறன் பார். நீ வெட்டி பேச்சு பேசாம பூசணியை கொடும் வியாபாரி யாரே' என்றான். மனசுக்குள் இவன் வசமா மாட்டினா தான் திருந்துவான் என்று புறுபுறுத்தபடியே பூசணியை கொடுத்தார் வியாபாரி.

மறு நாள் பூசணி கெல்மெட்டை போட்டபடி தன் பிள்ளையையும் வண்டியில் ஏற்றி கொண்டு போன கஞ்சமிக்கு எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டது. பூசணிக்காய் சிதறிப்போனது. கஞ்சமி பலத்த காயமடைந்தான். பிள்ளை சிறிதளவு காயமடைந்தான். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கஞ்சமியிடம் ஏமாற்றிய குற்றத்திற்கு பொலிஸார் 4000 ரூபா அபராதம் விதித்தனர். கஞ்சமியின் விபத்தை பார்க்க வந்த வியாபாரி சொன்னார் பார்த்தியா கஞ்சமி கடுமையாக மிச்சம் பிடித்து பொலிசை ஏமாற்ற நினைத்தாய். இன்று இப்படி ஆயிற்று. சரி விடு இனியாவது கவனமாக இரு. உழைப்பது எமது தேவையை நிறைவு செய்து வாழ்வதற்கு தான் என்றார் வியாபாரி. தன் தவறை உணர்ந்த கஞ்சமி அழுதபடி சொன்னான் 'ஆமாம் வியாபாரியே. நான் கஸ்ரப்பட்டு உழைக்கும் பணத்தை மிச்சப்படுத்துவதாக நினைத்து ஓவராக கஞ்சம் பிடித்துவிட்டேன். அது தான் இந்த நிலை. 1000 ரூபா கெல்மெட்டில் கஞ்சம் பார்த்து இன்று வைத்திய செலவு 2000. பொலிஸ் அபராதம் 4000 செலவு செய்ய வேண்டியாயிற்கு. இனியாவது என் பழக்கத்தை மாற்ற தான் வேண்டும்' என்றான் கஞ்சமி.

உழைக்கும் பணம் நாம் சந்தோசமாக வாழ்வதற்கு தான். சட்டமும் விதிமுறைகளும் எமது பாதுகாப்பிற்கு தான். எனவே அதை உணர்ந்து வாழ்வது தான் வாழ்க்கையின் வெற்றி என்று அன்பாக கஞ்சமிக்கு உணர வைத்து விடைபெற்றார் வியாபாரி.

## பழமொழி

1 இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
2 இங்கே தலை காட்டுகிறான், அங்கே வால் காட்டுகிறான்.
3 இஞ்சி இலாபம் மஞ்சளில்.
4 இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்.
5 இட்ட உறவு எட்டு நாளைக்கு நக்கின உறவு நாலு நாலைக்கு.
6 இட்டுக் கெட்டார் எங்குமே இல்லை.
7 இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்.
8 இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
9 இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
10 இரண்டு ஓடத்தில் கால் வைக்காதே.
11 இரவற் சீலையை நம்பி இடுப்புக் கந்தையை எறியாதே.
12 இராகு திசையில் வாழ்ந்தவனும் இல்லை




மதம் என்பது வளர்ச்சி பற்றியது என்பதை உணர வேண்டும் ; அது வெறும் பொருளற்ற பிதற்றல்கள் அல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு மனிதன் கடவுளை கண்டான். புதரில் கடவுளை கண்டார் மோசஸ். மோசஸ் கடவுளை கண்ட போது என்ன செய்தாரோ, அது உங்களை காப்பாற்றுமா? ஒருவன் கடவுளை கண்டது, உங்களை உற்சாகம் படுத்தி அவ்வாறு செய்யும் படி துண்டலாம் அதற்கும் மேலாக அது உங்களுக்கு உதவி செய்யாது. முன்னோர்களின் உதாரணகளுடைய முழுப்பயனும் அவ்வளவுதான். அதருக்கு மேல் ஒன்றுமில்லை. செல்லும் வழியிலுள்ள கைகட்டிய கம்பங்கள் அவை. ஒருவன் உண்டால் இன்னொருவனின் பசி தீராது. ஒருவன் கடவுளை காண்பது மற்றொரு மனிதனைக் காபற்றாது. உங்களுக்கு நீங்களே கடவுளை காண வேண்டும். இப்போது சண்டை எல்லாம் கடவுளுக்கு ஒரு உடலில் முன்று தலைகளா அல்லது ஆறு தலைகளா என்பது பற்றியே! ஆனால் நீங்கள் கடவுளை கண்டதுண்டா என்றால் இல்லை காண முடியும் என்று நம்புவதும் இல்லை. நாம் எவ்வளவு மதிகெட்ட முட்டாள்கள்! நிச்சியமாக பைதியகாரர்களே.

கடவுள் என்று ஒருவர் உண்டானால் அவர் உங்கள் கடவுளாகவும் என் கடவுளாகவும் இருக்க வேண்டும் என்பது இந்தியாவில் தொண்டுதொட்டு வரும் கருத்து. சூரியன் யாருக்கு சொந்தம்? அம்புலி மாமா எல்லாருக்கும் மாமா என்கிரிகள். கடவுள் ஒருவர் உண்டானால் நீங்கள் அவரை பார்க்க முடிய வேண்டும். இல்லாவிட்டால் அவர் எப்படியாவது போகட்டும்!

கடவுள் ஒருவர் இருக்கிறார் அவர் எங்கும் நிறைந்துள்ளார் என்று நீங்கள் எல்லாரும் சொல்கிறீர்களே எங்கும் நிறைத்திருக்கிறார் பற்றி உங்கள் கருத்து என்ன? சற்று கண்களை மூடிக்கொண்டு சிந்தியுங்கள். அது என்ன என்பதை எனக்கு கூறுங்கள். உங்கள் சிந்தனையில் விரிவதுதான் என்ன? ஏற்கனவே நீங்கள் கண்ட பரந்த கடல் அல்லது விரிந்த நீல வானம் அல்லது அகன்ற புல்வெளி அல்லது இவைபோன்ற வேறு எதோ ஒன்று அப்படிதானே? இதுதான் எங்கும் நிறைந்தவர் என்பதற்கு நீங்கள் சொல்லும் பொருளானால் அது பயனற்றது நீங்கள் அதன் பொருளை உணரவே இல்லை. இறைவனின் மற்ற குணங்களும் அப்படிதான். அவர் எல்லாம் வல்லவர் இ எல்லாம் அறிந்தவர் என்று கூறும் பொது நாம் என்ன புரிந்துகொள்கிறோம்? எதுவும் இல்லை. மதம் என்பது அநுபூதி. இறைவனை பற்றிய உங்கள் கருத்தை நீங்கள் அனுபூதியில் அறியும்போதுதான் நீங்கள் இறைவனை வழிபடுகிரிகள் என்று கூறுவேன். அதை அடையாதவரை நீங்கள் அந்தச் சொற்களிலுள்ள எழுத்துக்களை எழுத்துகுட்டி படிக்க தெரிந்தவர்கள் அவ்வளதான்.

இந்த அனுபூதி நிலையை அடைய நாம் கண்ணுக்கு புலனாகின்றவை வாயிலாக செல்ல வேண்டும். குழந்தைகள் எண்ணிக்கை கற்கும் போது முதலில் புறபொருட்களின் மூலம் தான் ஆரம்பிக்கிறது பிறகு தான் மனத்தாலேயே செய்ய கற்றுக்கொள்கிறது. ஒரு குழந்தையிடம் 5*2 என்று கூறினால் அதற்கு ஏதும் புரியாது. ஆனால் பத்து பொருட்களை கொடுத்து, அது எப்படி என்பதை காட்டி விளக்கினால் புரிந்து கொள்ளும். இது நிதானமான நீண்ட பாதை இங்கு நாம் எல்லாரும் குழந்தைகள். நாம் வயது முதிந்தவர்கள் இருக்கலாம், உலகிலுள்ள எல்லாம் நூல்களை படித்திருக்கலாம் ஆனால் ஆன்மிக துறையில் நாம் எல்லாரும் குழந்தைகளே. கொள்கைகள், தத்துவங்கள், அற கோட்பாடுகள் எல்லாவற்றையும் எவ்வளவுதான் உங்கள் மூளைக்குள் திணித்தாலும் அவற்றால் பெரிதாக பலன் ஒன்றும் இல்லை. நீங்கள் யார், அனுபூதியில் என்ன உணர்திருகிரிகள்? இவைதான் பயனுள்ளவை இ சாரமனவை. ஆனால் நாம் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அறிதிருக்கிறோம், அனுபூதியில் எதையும் உணரவில்லை .

சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை முறையாகப் பின்பற்றாமல் போனதுதான் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் . மதம் என்பது மிருகத்தை மனிதனாக்கும், மனிதனை கடவுளாக்கும்.

– சுவாமி விவேகானந்தா



நிலுஸ்ரிகா தரம்: 04
யா / திருக்குடும்ப கன்னியர்மடம்



ற.கபிசாயினி தரம்: 01
யா / சுண்டுக்குளி மகளிர் கல்லூரி



மழை வருவதை அரை மணி நேரத்துக்கு முன்பே சொல்லிவிடும் குடையை உருவாக்கியிருக்கிறது பிரான்ஸ். ஸ்மார்ட் போனில் அப்ளிகேஷனை டவுன்லோட் செய்துகொண்டு, குடையை இயக்க வேண்டும். வானிலை மாற்றங்கள் மட்டுமின்றி, வீட்டிலோ, வெளியிலோ குடையை மறந்து வைத்துவிட்டு வருவதைக்கூட இந்த ஆப் காட்டிக் கொடுத்துவிடும். குடையில் இருக்கும் சென்சார்கள் நேரம், வெளிச்சம், ஈரப்பதம், அழுத்தம், வெப்பநிலை போன்றவற்றைப் பதிவு செய்து, அடுத்து அரை மணி நேரத்தில் என்ன நடக்க இருக்கிறது என்பதைச் சொல்லிவிடுகிறது. குடையை மறந்துவிட்டுக் கிளம்பினாலோ, வேறு எங்கோ குடையை வைத்துவிட்டுக் கிளம்பினாலோ, ஜிபிஎஸ் தொழில்நுட்பம் மூலம் குடை இருக்கும் இடத்தை நமக்கு போன் காட்டிக் கொடுத்துவிடும். "வானிலைக்கு ஏற்ப இந்தக் குடையின் வண்ணங்களும் மாறிக்கொண்டே இருக்கும்.



முல்லைத்தீவு வட்டுவாகல் சப்த கன்னியர் ஆலயத்தில் இராஜகோபுரத்திற்காக மண் அகழ்ந்த போது 11 அடி ஆழத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட பண்டைய மட்குடம். முன்னர் அம்மனுக்கு உப்பு நீரினால் விளக்கேற்ற இந்த குடம் பயன்படுத்தப்பட்டதென்கிறார்கள்.

ஜப்பானிலுள்ள பூனை கபே, முயல் கபேயை போல முள்ளெலி கபேயும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஹரி கபே எனப்படும் இதில் 30 வகையான முள்ளெலிகள் உள்ளன. இங்கு சாப்பிட வருபவர்கள் முள்ளெலிகளை கையில் எடுத்து பலமணி நேரம் செலவிடலாம். காசு கொடுத்து வீட்டுக்கும் கொண்டு செல்லலாம். முள்ளெலிகள் மனிதர்களுடன் எளிதாக பழகிவிடுவதால், மனஅமைதிக்காக பலரும் இங்கு முண்டியடித்துக் கொண்டு வருகிறார்கள்.



அமெரிக்காவில் வசிக்கும் 26 வயது எட்வர்ட் ஜெல்ட், கடந்த ஓராண்டு காலமாக காரிலேயே வசித்து வருகிறார். வீடு இல்லாமலோ, குடும்பப் பிரச்சினை காரணமாகவோ அவர் இந்த முடிவை எடுக்கவில்லை. பெரிய நிறுவனத்தில் ரீஜினல் சேல்ஸ் மேனேஜராக பணிபுரிகிறார். இன்னும் திருமணம் நடக்கவில்லை. குறைந்த தேவைகளை வைத்துக்கொண்டு, நிம்மதியாக வாழ வேண்டும் என்ற கொள்கையில் இதுபோல வாழ்ந்து வருகிறார் எட்வர்ட்.





ஐகன் ஸ்பீக் எனப்படும் சிறிய உருவங்கள் பதித்த இந்த ரிசேர்ட் அணிந்து கொண்டு போனால் எந்த மொழி தெரியாதவரும் சமாளித்துக் கொள்ளலாம் என்கிறார்கள் இதனை தயாரித்தவர்கள். தண்ணீர், பாத்ரூம், தங்கும்அறை முதலான நாற்பது உருவங்கள் வரையப்பட்ட இந்த ரீசேர்ட் அணிந்து கொண்டு உலகைச் சுற்றி வந்த சில அனுபவசாலிகளும் உள்ளனர்.



மகாத்மா காந்தி உருவாக்கிய நூல் ராட்டையை பிரபல்யப்படுத்தும் விதமாக பிரமாண்ட ராட்டையை உருவாக்கி டெல்லி விமானநிலையத்தில் நிறுவப்பட உள்ளது. இதற்காக உருவாக்கப்பட்ட 4 தொன் நிறையுடைய பிரமாண்ட ராட்டை. உலகின் பிரமாண்ட ராட்டை இதுதான் எனப்படுகிறது.



இந்த சுட்டிப்பையனின் கோபம்தான் இன்றையதிகதியில் இணைய உலகில் வைரல் வீடியோ. சீனாவில் நடந்தது. வீதியோரங்களில் உள்ள கடைகளை அப்புறப்படுத்த சென்ற அதிகாரிகள், இந்த வாண்டின் பாட்டி கடையையும் அப்புறப்படுத்த முயன்றுள்ளனர். பாட்டியுடன் தாறுமாறாக நடந்து கொண்டுள்ளனர். இதை பார்த்து கொதித்து போன சிறுவன் இரும்பு கம்பியை தூக்கி அதிகாரிகளை மிரட்டிய காட்சியிது. இந்த வீடியோ வைரலாக பரவியதையடுத்து, அதை அழிக்க சீனா முயன்றுவருகிறது.













இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 24.04.2016 அன்று வெளியிடப்பட்டது